745

APPROVED BY THE TEXT-BOOK COMMITTEE, MADRAS.

TAMIL GRAMMAR FOR BEGINNERS

ஆரம்பத் தமிழ் இலக்கணம்

S. R. SUBRAMANIA PILLAI
CATIONAL PUBLISHER
VELLY JUNCTION
1935 [Price 3 As.

TB
P31(3)
N35
130428

ஆரம்பத் தமிழ் இலக்கணம்

பண்டித: A. சிவசுப்பிரமணியன்
எழுதியது

துரைத்தனத்தார் அங்கீகரித்தது

எஸ். ஆர். சுப்பிரமணிய பிள்ளை
பப்ளிஷர் : : புக்ஸெல்லர்
திருநெல்வேலி ஜங்ஷன்

பதிப்புரிமை] [விலை அணா 3

First Edition 1932
Reprinted 1934, 1935

APPROVED BY THE TEXT BOOK COMMITTEE,
MADRAS.

VIDE FORT ST. GEORGE GAZETTE PART I B. PAGE 244,
DATED 12TH APRIL 1932.

முகவுரை.

சிறு பாலர்கட்கு ஏற்றவாறு முக்கிய சில இலக்கணக் குறிப்புக்களே இப்புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கின்றன. சில இடங்களில் பேரிலக்கணங்களிற் காணும் குறியீடுகளே அநுசரித்துப் பெயர் கொடுத்தும் சில இடங்களில் பொருள் விளங்குமாறு புதுப் பெயர் கொடுத்தும் எழுதியிருக்கிறேன். விளக்கமான பல உதாரணங்கள் வாக்கிய வடிவிலே வைத்துக் காட்டியிருப்பது கவனிக்கத்தகும்.

இப்படிக்கு

பண்டித: A. சிவசுப்பிரமணியன்,

மதுரை.

பொருளடக்கம்

				பக்கம்
1.	எழுத்தியல்	...	...	5
2.	சொல்லியல்	...	...	18
3.	புணரியல்	...	...	50
4.	சொற்றொடரியல்	...	...	60

ஆரம்பத் தமிழ் இலக்கணம்.

1. தமிழ் இலக்கணம், தமிழ்ப் பாஷையைப் பிழையில்லாமல் பேசவும் எழுதவும் கற்பிக்கும் நூலாம்.

குறிப்பு:—தமிழ் இலக்கணத்தில் நாம் தெரிந்து கொள்ள வேண்டுவன எழுத்து, சொல், பொருள் என்ற மூன்றுமாம். ஆயினும், இப்புத்தகத்தில் எழுத்தையும் சொல்லையும் பற்றிய சில முக்கியமான இலக்கணங்களைத் தெரிந்து கொள்வோம்.

எழுத்தியல்.

2. இயல் என்ருல் இலக்கணம். எழுத்தியலாவது எழுத்துக்களின் இலக்கணம் கூறுவது.

3. தமிழ் எழுத்துக்கள், உயிரெழுத்து, மெய்யெழுத்து, உயிர்மெய்யெழுத்து, ஆய்த எழுத்து என நான்கு வகைப்படும்.

4. எழுத்தாவது, சொல்லுக்குக் காரணமாகிய ஒலியாம்.

குறிப்பு:—ஆ என்பது அ, ஆ, இ, ஈ என்ற வரிசையில் எழுத்து. பசுவைக் குறிக்கையில் சொல். ஈ என்பது இ, ஈ, உ, ஊ என்ற வரிசையில் எழுத்து. சிறு பறவையைக் குறிக்கையில் பெயர்ச் சொல். கொடு என்ற அர்த்தத்தில் வினைச் சொல். நீ என்பது ந, நா, நி, நீ என்ற வரிசையில் எழுத்து. முன்னால் நிற்கும் ஒருவனைக் குறிக்கையில் சொல். இவை சொல்லாகவும், சொல்லுக்குக் காரணமான எழுத்தாகவும் இருப்பதுகவனிக்க. இவை ஓரெழுத்தாலாகிய சொற்கள். ஆடு, படி முதலியன இரண்டெழுத்தாலும் அணில், பறவை என்பன மூன்றெழுத்தாலும் அமைந்த சொற்கள்.*

5. ஊமை, பறவை, மிருகங்கள் இவற்றின் வாயிலிருந்து வருகிற ஓசை, சொல்லுக்குக் காரணமான எழுத்தாவதில்லை.

6. எழுத்துக்கு இரண்டு வடிவம் உண்டு. ஒன்று ஒலி வடிவம். மற்றொன்று வரி வடிவம்.

குறிப்பு:—எழுத்தை உச்சரிக்கும்போது அதற்கு ஒலிவடிவம் உண்டாகின்றது. எழுதும்போது வரி வடிவம் உண்டாகின்றது. காதால் கேட்கின்ற சொற்கள் எல்லாம், ஒலி வடிவுடைய எழுத்துக்களாலானவையே. புத்தகங்களில்காண்பனஎல்லாம் எழுத்துக்களின் வரி வடிவங்களே. ஒலி வடிவை நமது காதாலும், வரி வடிவைக் கண்ணாலும் அறிந்து கொள்ளலாம்.

உயிரெழுத்து.

7. உயிரெழுத்து மொத்தம் பன்னிரண்டு.

---

* குறிப்பிற் காட்டிய ஆ, ஈ, ஆடு, படி, அணில், பறவை முதலிய சொற்களில், அவ்வெழுத்துக்கள் முதலில் உச்சரிக்கப்பட்டு, அவை ஒன்றும் பலவும் பொருந்தி நின்று பொருளைக் கொடுத்துச் சொல்லாதல் கவனிக்க.

அவையாவன:— அ ஆ, இ ஈ, உ ஊ, எ ஏ, ஐ, ஒ ஓ, ஔ, என்பனவாகும்.

குறிப்பு:—உயிரானது தானாக இயங்க வல்லது. உடலின் இயக்கத்துக்கு இன்றியமையாது (அவசியமாய்) வேண்டப்படுவது. அதுபோலவே, உயிர் எழுத்துக்கள் தாமாக உச்சரிக்கப்படுதலோடு, மெய்யெழுத்துக்களின் உச்சரிப்புக்கும் அவசியமாய் வேண்டப்படுகின்றன; ஆதலால் இந்த எழுத்துக்களை உயிர் எழுத்துக்கள் என்பர்.

உயிர் எழுத்துக்களின் வகை.

8. உயிர் எழுத்துக்கள், குறில், நெடில் என்று இருவகைப்படும். குறில் எழுத்து குற்றெழுத்து என்றும், நெடில் எழுத்து நெட்டெழுத்து என்றும் பெயர் பெறும்.

9. குறில் எழுத்துக்கள் ஐந்து. அவையாவன:— அ, இ, உ, எ, ஒ, என்பன.

10. நெடில் எழுத்துக்கள் ஏழு. அவையாவன:— ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்பன.

உச்சரிப்பு வித்தியாசத்துக்கு உதாரணம்:—

அடு, ஆடு; இடு, ஈடு; உடு, ஊடு; எடு, ஏடு; ஒடு, ஓடு இவற்றிற் காண்க.

குறிப்பு:—

குறில் எழுத்து - குறுகிய ஓசையை யுடைய எழுத்து.

நெடில் எழுத்து - நீண்ட ஓசையை யுடைய எழுத்து.

மூன்றடி உயரத்தில் ஒருவனும், ஆறடி யுயரத்தில் ஒருவனும் நிற்கிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். ஆறடிக்காரனை

நோக்க மூன்றடிக்காரன் குட்டையன்; மூன்றடிக்காரனை நோக்க, ஆறடிக்காரன் நெட்டையன். அதுபோலவே, நெடில் எழுத்துக்களின் உச்சரிப்பை நோக்கக் குறில்களின் ஓசை குறுகிய ஓசையும், குறில் எழுத்துக்களின் ஓசையை நோக்க நெடில்களின் ஓசை நீண்ட ஓசையும் பெற்றிருத்தலால், இவை குறில் நெடில் என்று பெயர் பெற்றன.

சுட்டெழுத்து.

11. உயிர் எழுத்துக்களில், அ, இ, உ என்பன சுட்டெழுத்தாகவும் வரும். சுட்டெழுத்தென்றால் ஒன்றைச் சுட்டிக் காட்ட வரும் எழுத்து என்று பொருள்.

உதாரணம்:—அவ் வீடு, இவ் வீடு, உவ் வீடு.

குறிப்பு:—அ, இ, உ இவை சுட்டுப்பொருளில் வராவிட்டால், அதாவது ஒரு பொருளைச் சுட்டிக் காட்டாவிட்டால், சுட்டெழுத்து எனப்படா: உயிர் எழுத்து எனவே படும்.

உதாரணம்:—அரசன், இரவு, உண்மை.

'இந்த மூன்று எழுத்துக்களும் சுட்டெழுத்தாகவும் வரும்' என்ற இவ் வாக்கியத்தில் இந்த என்பதும் சுட்டு. இ என்ற சுட்டெழுத்து இந்த என மாறி வந்திருக்கிறது. இது போலவே, அ என்பது அந்த என்றும், உ என்பது உந்த என்றும் மாறி வரும்.

உதாரணம்:—அந்த வீடு, இந்த வீடு, உந்த வீடு.

உ என்பது பாடல்களிலே மட்டும் வரும். அ என்பது தூரத்திலுள்ள பொருளையும், இ என்பது சமீபத்திலுள்ள பொருளையும், உ என்பது இரண்டுக்கும் நடுவிலுள்ள பொருளையும் குறித்துக் காட்டும்.

உதாரணம்:-அவன் நல்லன்; இவன் நல்லன்; உவன் நல்லன்.

வினு எழுத்து

12. உயிர் எழுத்துக்களில், ஆ, எ, ஏ, ஓ என்பன வினு எழுத்தாக வருவதும் உண்டு. சுட்டெழுத்தைப் போலவே, வினு எழுத்தும் வினுப் பொருளைத் தந்தால் மட்டும் வினு எழுத்தாம்.

குறிப்பு:—உயிர்மெய்யெழுத்தில் **யா** என்பதும் வினு எழுத்து.

உ - ம்—யார்

13. வினுப் பொருளாவது, விடையை எதிர் நோக்கி நிற்கும் கேள்வியாக இருப்பதாம்.

உதாரணம்:—1. இராமன் பரீக்ஷையில் தேறினுன்.

2. இராமன் பரீக்ஷையில் தேறினுனு?

குறிப்பு:—முதல் வாக்கியம் இராமன் தேறியது கூறிற்று. இரண்டாவது வாக்கியம், அவன் தேறியதைஅறிய விரும்பும் கேள்வியாய் நின்று விடையை எதிர் நோக்கி நிற்கிறது. இப்படி விடையை எதிர் நோக்கும் வினுப் பொருள் வாக்கியமாக இரண்டாவது வாக்கியத்தைச் செய்தது எது? தேறினுனு என்ற வார்த்தையிலுள்ள **ஆ** என்பது. இங்கே அந்த **ஆ** என்பது வினுப்பொருளைத் தருதலால் வினு எழுத்தாகும்.

14. ஆ, எ, ஏ, ஓ என்பன வினு வெழுத்தாக வருவதற்கு உதாரணம்:—

1.	படியாதவன் பரீக்ஷையில் தேறுவானு?	ஆ
2.	எவன் தீமை செய்து நன்மை யடைந்தான்?	எ
3.	நன்மை செய்தார்க்குப் பொல்லாங்கு ஏது?	ஏ
4.	கடவுளை நம்பினவர் கைவிடப் பட்டாரோ?	ஓ

குறிப்பு:—ஆ, ஓ என்பன வார்த்தையின் கடைசியில் நின்றுதான் வினப்பொருளைத் தரும். எ என்பது முதலில் நின்றுதான் வினவாகும். ஏ என்பது இரண்டு இடத்திலும் நின்று வினப் பொருளைத் தரும். ஆனாலும் இக்காலத்தில் ஏ என்பது வார்த்தையின் கடைசியில் வினவாக வருவதில்லை.

15. அ, இ, உ என்ற சுட்டெழுத்துக்கள் அந்த, இந்த, உந்த என்று மாறி வருவதுபோல, எ என்ற வின எழுத்து எந்த என்று மாறி வருவதும் உண்டு.

உதாரணம்:—எந்தப் பாடம் உனக்கு விளங்கவில்லை?

குறிப்பு:—உயிர்மெய்யெழுத்தாகிய யா என்பது வார்த்தையின் முதலில் நின்றுதான் வினப்பொருளைத் தரும்.

(உ - ம்) யார்? யாது?

சுட்டு வினக்களில் அகமும் புறமும்.

16. அ, இ, உ என்ற சுட்டுக்களும், எ, ஏ, யா என்ற வினக்களும் அகச்சுட்டு, அகவின, புறச் சுட்டு, புறவின எனவும் வரும்.

உதாரணம்:–

அவன், அவள், அவர், அது, அவை
இவன், இவள், இவர், இது, இவை.
உவன், உவள், உவர், உது, உவை.

எவன், எவள், எவர், எது, எவை.
ஏவன், ஏவள், ஏவர், ஏது.
யாவன், யாவள், யாவர், யாது, யாவை.

} அகத்து வந்தன.

அவ்விராமன், அச்சீதை, அவ்வரக்கர், அப்பசு, அப்பசுக்கள். இ, உ இவற்றையும் முன் நிறுத்திக் காண்க. எவ்விராமன், எச்சீதை, எவ்வரக்கர், எப்பசு, எப்பசுக்கள்.	புறத்து வந்தன.

குறிப்பு:—யாவும் எயும் அகவினவாக மட்டுமே வரும். அந்த, இந்த, உந்த என்பன புறத்தில் மட்டும் வரும். ஆ, ஓ என்பன புறவினவிலல்லாமல் வருவதில்லை.

அவ்வீடு என்ற புறச்சுட்டில், அ என்ற சுட்டெழுத்தை வேறு பிரித்து நிறுத்தினும் வீடு என்பது தனிச் சொல்லாய்த், தன் பொருள் குறித்து நிற்பதுபோல், அவன் என்ற அகச்சுட்டில், சுட்டெழுத்தை வேறு பிரித்து நிறுத்தினல், அன் என்பது தனிச் சொல்லாய்த், தன் பொருளைக்கொடுக்கும் ஆற்றல் இல்லாததாய்ச் சுட்டோடு சேர்ந்தே பொருளைக் கொடுக்க வல்லதாகின்றது. ஆதலால் சுட்டோடு ஒற்றுமைப்பட்டு ஒன்ருய்ப் பொருள்குறிக்கும் அதனை அகச்சுட்டு என்றும், பிரிக்கப்பட்ட காலத்தும் தான் சேர்ந்த சொல்லின் பொருள் கெடாதிருக்கும் அதனைப் புறச் சுட்டென்றும் பெயர் கொடுத்துளர். அகவின புறவினக்களுக்கும் இதுவே இலக்கணம்.

மெய்யெழுத்து.

17. மெய்யெழுத்து மொத்தம் பதினெட்டு. அவையாவன:—க் ங் ச் ஞ் ட் ண் த் ந் ப் ம் ய் ர் ல் வ் ழ் ள் ற் ன் என்பன.

மெய்யென்ருல் உடல் என்ற அர்த்தம்.

குறிப்பு:—உடலானது உயிரின் உதவியில்லாமல் இயங்கமாட்டாது. அதுபோலவே மெய்யெழுத்துக்களும், உயிர் எழுத்துக்களின்

உதவியின்றி இயங்கமாட்டா. அதாவது உச்சரிக்கப்படாத நிலையுடையன. மெய்யெழுத்தை உச்சரிக்கையில் இக்உ, இங்உ, இச்உ, என்று உயிர் எழுத்தின் உதவியோடுதான் உச்சரிக்கின்றோம். அதனை உச்சரித்துக் கண்டு கொள்க.

18. வரி வடிவில், இந்த மெய்யெழுத்துக்கள் புள்ளி பெற்று வரும்.

மெய் யெழுத்துக்களின் வகை.

19. மெய்யெழுத்துக்கள் வல்லின எழுத்து, மெல்லின எழுத்து, இடையின எழுத்து என்று மூன்று வகைப்படும். இவற்றை வல்லெழுத்து, மெல்லெழுத்து, இடையெழுத்து என்றும் சொல்வர்.

20. உயிர் எழுத்துக்களில் ஓசை வித்தியாசம் பற்றிக் குறில், நெடில் என இரண்டு பிரிவுகள் கொள்ளப்பட்டன. அது போலவே, மெய்யெழுத்துக்களிலும், ஓசை வித்தியாசம் பற்றி மூன்று பிரிவுகள் கொள்ளப்பட்டன. வல்லெழுத்து, வலிய ஓசையையுடைய எழுத்து. மெல்லெழுத்து, மெல்லிய ஓசையையுடைய எழுத்து. இடையெழுத்து, அவை இரண்டுக்கும் நடுத்தரமான ஓசையையுடைய எழுத்து.

வல்லெழுத்து

21. வல்லின எழுத்துக்கள் மொத்தம் ஆறு. அவையாவன:—க், ச், ட், த், ப், ற் என்பன.

மெல்லெழுத்து

22. மெல்லின எழுத்துக்கள்மொத்தம் ஆறு. அவையாவன:—ங், ஞ், ண், ந், ம், ன் என்பன.

இடையெழுத்து

23. இடையின எழுத்துக்கள் மொத்தம் ஆறு.

அவையாவன:—ய், ர், ல், வ், ழ், ள் என்பன.

குறிப்பு:—ஒவ்வோர் இனத்துக்கும் ஆருக,மூவினத்துக்கும்சேர்ந்து மெய்யெழுத்துக்கள் பதினெட்டாதல் கவனிக்க. இவற்றின் ஓசை வித்தியாசங்களைக் கீழ்வருவனவற்றைஉச்சரித்துஅறிக.

வல்லோசை.

1. கொக்கு மொக்கிக் கக்கி விக்கும்.

2. பச்சைக் கிச்சை வைச்ச கொச்சையன்.

3. கட்டுப் பட்டுத் தலை வெட்டுப் பட்டுக் கெட்டான்.

4. முத்தைத் தரு பத்தித் திருநகை.

5. தப்பறப் பார்ப்பினைக் காப்பதத் துப்புடைப் புள்.

6. பற்றுக பற்றற்ருன் பற்றினை அப்பற்றைப்பற்றுக பற்று விடற்கு.

மெல்லோசை.

1. அங்கிங் கெங்கும் பங்கமறத் தங்கும் புங்கன் பைங்கழல் கள்.

2. வஞ்சன் கஞ்சன் நெஞ்சஞ்சான்.

3. கொண்டலொன் றிரண்டுகெண்ணின் மொண்டுகொண்டெ ஞவியை உண்ட துண்டு.

4. சங்கியம்பின கொம்பலம்பின சாமகீதம் நிரம்பவே.

இடை யோசை.

1. வளவிய விள நிலவெழில் விரவிய தொரு பொழிலே.

இவை வல்லின, மெல்லின, இடையின ஓசை வித்தியாசத்தைத் தெளிவாக உணர்த்துதலால் தரப்பட்டன. இவற்றுக்குப் பொருள் வேண்டா. இவற்றை உச்சரித்துக் காண்பதே போதும்.

உயிர் மெய் யெழுத்து

24. உயிர்மெய்யெழுத்தாவது, உயிர் எழுத்தும் மெய்யெழுத்தும் சேர்ந்த ஓரெழுத்து.

உதாரணம்:—க் + அ + க; க் + ஆ = கா.

25. உயிர்மெய்யெழுத்தைப்பிரித்தால், அதில் ஓர் உயிர் எழுத்தும், ஒரு மெய்யெழுத்தும் இருக்கும்.

உதாரணம்:—கா என்பதில் க் என்ற மெய்யும், ஆ என்ற உயிரும் இருப்பது காண்க.

26. ஒரு மெய்யெழுத்தின் மேல் பன்னிரண்டு உயிர் எழுத்தும் தனித்தனி சேரும்; அப்

படிச் சேருவதால், ஒரு மெய்யெழுத்தின் இட மாகப் பன்னிரண்டு உயிர்மெய் யெழுத்துக்கள் தோன்றும்.

உதாரணம்:—

1. க்+அ=க. 2. க்+ஆ=கா. 3. க்+இ=கி.
4. க்+ஈ=கீ. 5. க்+உ=கு. 6. க்+ஊ=கூ.
7. க்+எ=கெ. 8. க்+ஏ=கே. 9. க்+ஐ=கை.
10. க்+ஒ=கொ. 11. க்+ஓ=கோ 12. க்+ஔ=கௌ.

27. மெய்யெழுத்துக்கள் பதினெட்டு இருப் பதால், அவற்றின்மேல், பன்னிரண்டு உயிரும் தனித்தனி சேரும்போது, இருநூற்றுப்பதினாறு உயிர்மெய்யெழுத்துக்கள் உண்டாகின்றன. அட்ட வணையில் அவற்றைக் காண்க.

28. மெய்யெழுத்துக்கள் ‘அ’ என்னும் உயிரோடு சேரும்போது, தம்முடைய புள்ளி மட்டும் நீங்கப் பெறும்.

உதாரணம்:—க்+அ=க. பிறவும் அட்டவணையிற் காண்க.

29. மற்ற உயிர்களோடு சேரப் பெற்றால், புள்ளி நீங்குதலோடு, சில மாறுதல்களையும் பெறும்.

உதாரணம்:—க்+ஆ=கா. க்+இ=கி, க்+ஈ=கீ.........

உயிர் மெய்

க	கா	கி	கீ	கு	கூ	கெ
ங	ஙா	ஙி	ஙீ	ஙு	ஙூ	ஙெ
ச	சா	சி	சீ	சு	சூ	செ
ஞ	ஞா	ஞி	ஞீ	ஞு	ஞூ	ஞெ
ட	டா	டி	டீ	டு	டூ	டெ
ண	ணா	ணி	ணீ	ணு	ணூ	ணெ
த	தா	தி	தீ	து	தூ	தெ
ந	நா	நி	நீ	நு	நூ	நெ
ப	பா	பி	பீ	பு	பூ	பெ
ம	மா	மி	மீ	மு	மூ	மெ
ய	யா	யி	யீ	யு	யூ	யெ
ர	ரா	ரி	ரீ	ரு	ரூ	ரெ
ல	லா	லி	லீ	லு	லூ	லெ
வ	வா	வி	வீ	வு	வூ	வெ
ழ	ழா	ழி	ழீ	ழு	ழூ	ழெ
ள	ளா	ளி	ளீ	ளு	ளூ	ளெ
ற	றா	றி	றீ	று	றூ	றெ
ன	னா	னி	னீ	னு	னூ	னெ

யெழுத்துக்கள் 216

கே	கை	கொ	கோ	கௌ
ஙே	ஙை	ஙொ	ஙோ	ஙௌ
சே	சை	சொ	சோ	சௌ
ஞே	ஞை	ஞொ	ஞோ	ஞௌ
டே	டை	டொ	டோ	டௌ
ணே	ணை	ணொ	ணோ	ணௌ
தே	தை	தொ	தோ	தௌ
நே	நை	நொ	நோ	நௌ
பே	பை	பொ	போ	பௌ
மே	மை	மொ	மோ	மௌ
யே	யை	யொ	யோ	யௌ
ரே	ரை	ரொ	ரோ	ரௌ
லே	லை	லொ	லோ	லௌ
வே	வை	வொ	வோ	வௌ
ழே	ழை	ழொ	ழோ	ழௌ
ளே	ளை	ளொ	ளோ	ளௌ
றே	றை	றொ	றோ	றௌ
னே	னை	னொ	னோ	னௌ

ஆய்த எழுத்து

30. ஆய்த எழுத்தாவது, மூன்று புள்ளி வடிவமான ஓர் எழுத்து. அதன் வடிவம் ஃ.

31. அது, குறில் எழுத்துக்கும், வல்லின உயிர்மெய்யெழுத்துக்கும் இடையிலேதான் வரும்.

உதாரணம்:—அஃது, எஃகு, இருபஃது, அஃறிணை.

குறிப்பு:—இந்த உதாரணங்களில், ஆய்த எழுத்து, குறில் எழுத்துக்கும் வல்லின உயிர்மெய்யெழுத்துக்கும் இடையில் வந்திருப்பது காண்க.

எழுத்தியல் முற்றும்.

சொல்லியல்.

32. சொல்லியலாவது, சொற்களின் இலக்கணம் கூறுவது.

33. தமிழ்ச் சொற்கள், பெயர்ச் சொல், வினைச் சொல், இடைச் சொல், உரிச் சொல் என நான்கு வகைப்படும்.

34. சொல்லாவது, ஓர் எழுத்துத் தனித்தாயினும், ஒன்றுக்கு மேல் பல எழுத்துக்கள் தொடர்ந்து நின்றாயினும், ஒரு பொருளைக் குறித்து வருவது.

உதாரணம்:—ஆ=பசு, ஈ=கொடு; இவை ஓரெழுத்தாலாகிய சொற்கள்.

ஆடு, ஈடு, ஏடு இவை இரண்டு எழுத்தாலானவை.

மரம், எருது இவை பல எழுத்தாலானவை.

பெயர்ச் சொல்.

35. பெயர்ச் சொல்லாவது, பொருளுக்குப் பெயராய் வழங்கி வருவது.

உதாரணம்:—மனிதன், கல், மரம், யானை, புலி, செம்பு, பொன், கிளி, வாழை, பலா.

36. பெயர்ச் சொல்லில் திணை, பால், எண், இடம், வேற்றுமை என்ற இவ்வைந்தும் அறியக் கூடும்.

உதாரணம் :–பொன்னன்: உயர்திணை, ஆண்பால், ஒருமை, படர்க்கை, முதல் வேற்றுமை என்ற இவை அறிக.

யானை: அஃறிணை, ஒன்றன்பால், ஒருமை, படர்க்கை, முதல் வேற்றுமை என்ற இவை அறிக.

37. திணை என்றால் சாதி என்று அர்த்தம். திணை என்றாலும், சாதி என்றாலும், குலம் என்றாலும் பொருள் ஒன்றே.

38. திணை இரண்டு வகைப்படும். அவை யாவன:—உயர்திணை, அஃறிணை என்பன.

39. உயர்திணை என்றால் உயர்வான குலம் என்று பொருள்.

40. அஃறிணை என்றால் உயர்வல்லாத குலம் என்று அர்த்தம். அஃதாவது தாழ்ந்தகுலம் என்றபடி. அல் + திணை = அஃறிணை.

41. உயிர் உள்ள பொருளும் உயிரில்லாத

பொருளும் இந்த இரண்டு திணைக்குள் அடங்கி விடும்.

உயர் திணை.

42. உயர்திணைப் பொருள்கள்: மக்களும் தேவரும் உயர்திணையாம் : மக்கள் என்றால் மனிதர் என்று பொருள்.

43. உயர்திணைப் பொருள்களைக் குறிக்கும் சொல் உயர்திணைச் சொல்லாம்.

உதாரணம்:—1. சிவன், முருகன், பிரமன் } தேவரைக் குறித்தன.

2. அரசன், மூக்கன், குருடன் } மக்களைக் குறித்தன.

அஃறிணை.

44. அஃறிணைப் பொருள்கள்: மக்களையும் தேவரையும் ஒழிந்த உயிர் உள்ளவையும், உயிர் இல்லாதவையும் அஃறிணைப் பொருள்களாம். அவையாவன: பறவை, மிருகம் முதலியனவும், கல், மண், மரம் முதலியனவுமாம்.

45. அஃறிணைப் பொருள்களைக் குறிக்கும் சொல் அஃறிணைச் சொல்லாம்.

உதாரணம்:—

1. கிளி, வௌவால், காகம், கோழி, மயில்—பறவை.
2. யானை, புலி, கரடி, சிங்கம், நாய்— மிருகம்.
3. மலை, அருவி, வீடு, காடு, தென்னை, மா-பிறபொருள்

குறிப்பு:—இவை உயிர் உள்ளவற்றையும், உயிரில்லாதவற்றையும் குறித்து நின்றவாறு கவனிக்க.

பால்

46. பால் என்பது திணையின் உட்பிரிவு.

47. பால் என்றாலும், பிரிவு என்றாலும், பகுப்பு என்றாலும் பொருளொன்றே.

48. பால் ஐந்து வகைப்படும்.

அவையாவன: 1. ஆண்பால், 2. பெண்பால், 3. பலர்பால், 4. ஒன்றன்பால், 5. பலவின்பால் என்பன.

49. ஐந்து பால்களுள், ஆண்பால், பெண்பால், பலர் பால் என்ற மூன்று பால்களும் உயர்திணைக்கு உரியன.

உதாரணம்:—1. இராமன், அரசன், அவன்—ஆண்பால்.
2. சீதை, அரசி, அவள்—பெண்பால்,
3. பாண்டவர், அரசர், அவர்—பலர்பால்.

குறிப்பு:—இவை உயர்திணைக்கு உரியவாய் வந்தவாறு கவனிக்க.

50. ஒன்றன்பால், பலவின்பால் என்ற இரண்டும் அஃறிணைக் குரியன.

உதாரணம்:—யானை, வீடு, அது—ஒன்றன்பால்.
யானைகள், வீடுகள், அவை-பலவின்பால்.

குறிப்பு:-இவை அஃறிணைக்கு உரியவாதல் காண்க. முன் மூன்றும் பின் இரண்டுமாகப் பால் ஐந்து காண்க.

எண்

51. எண் என்பது சொல்லால் குறிக்கப் படும் பொருளின் அளவு.

52. எண் இரண்டு வகைப்படும்.

அவையாவன : ஒருமை, பன்மை என்பன.

ஒருமை

53. பொருள் ஒன்ருயின் எண் ஒருமையாம்.

உதாரணம்:-இராமன், சீதை, மனிதன், யானை, மரம்—அவன், அவள், அது.

பன்மை

54. பொருள் ஒன்றுக்கு மேல் அதிகப்பட்டால் எண் பன்மையாம்.

உதாரணம்:—மனிதர், யானைகள், மரங்கள்—அவர், அவை.

பாலுக்கும் எண்ணுக்கும் உள்ள சம்பந்தம்

55. உயர்திணையில் ஆண்பாலும், பெண்பாலும், எண்ணில் ஒருமையாம்.

உதாரணம்:—இராமன் அரசன்
சீதை அரசி
அவன் அரசன்
அவள் அரசி
} ஒருமையாதலால் கவனிக்க.

56. உயர்திணையில் பலர்பால் எண்ணில் பன்மையாம்.

உதாரணம்:—பாண்டவர் காடு சென்ருர்
அவர் போரில் வேன்ருர்
} பன்மையாதல் கவனிக்க

குறிப்பு:—அவர் என்பது பலர்பால். அது ஆண்பாலை அல்லது பெண்பாலைச் சுட்டி, ஒருமையில் வந்ததாயின், உயர்வு அல்லது தாழ்வு கருதி வந்ததென்று அறியத்தகும். ஏனென்ருல்

ஆண்பால் அவன் என்றும் பெண்பால் அவள் என்றும் வருதலால் என்க.

57. உயர்திணையில் பலர்பால், பன்மையைப் பல படியாகக் காட்டும்.

உதாரணம்:—1. இராமன் தன் தோழரைக் கண்டான்—இதில் தோழர் என்பது ஆண் பன்மையைக் காட்டியது.

2. சீதை தன் சேடியரைக் கூப்பிட்டாள்—இதில் சேடியர் என்பது பெண் பன்மையைக் காட்டியது.

3. கார்த்திகைத் திருநாள் மகிழ்ந்தனர் மக்கள். இதில் மக்கள் என்பது இருபாற் பன்மையையும் காட்டியது.

குறிப்பு:—இவற்றோடு, ஆடவர் கூட்டம், மகளிர் நோன்பு, மக்கட் சமுதாயம் என்பவற்றையும் நினைந்து கொள்க.

58. அஃறிணையில் ஒன்றன் பால் எண்ணில் ஒருமையாம்.

உதாரணம்:—யானை வந்தது; அது மதம் கொண்டது.

59. அஃறிணையில் பலவின் பால் எண்ணில் பன்மையாம்.

உதாரணம்:—யானைகள் வந்தன; அவை மதம் கொண்டன.

குறிப்பு:—உயர்திணையில் அவன் வந்தான், அவள் வந்தாள் என்று ஆண்பாலுக்கும் பெண்பாலுக்கும் தனித்தனி வினை கொடுத்துச் சொல்லுகிறோம். அஃறிணையில் எருது வந்தான், பசு வந்தாள் என்று ஆண் பெண் இவற்றிற்குத் தனித்தனி வினை கொடுத்துச் சொல்லுகிறோமா? இல்லை. ஆனால் என்ன சொல்லுகிறோம்? எருது வந்தது; பசு வந்தது; எருதுகள் வந்தன; பசுக்கள் வந்தன என்று எண்ணுக்கு ஏற்ப வினை

கொடுத்துச் சொல்லுகிறோம். ஆதலால், அஃறிணையில் ஆண்பால் பெண்பால் பிரிவுகள் கொள்ளப்படவில்லை. ஒன்று பல என்ற பகுப்புக்கள் மட்டுமே கொள்ளப்பட்டன.

இடம்.

60. இடமாவது சொல் வழங்குவதற்கு உரிய ஸ்தானம்.

61. இடம் மூன்று வகைப்படும்.
அவையாவன:—தன்மை, முன்னிலை, படர்க்கை என்பன.

தன்மையிடம்

62. வார்த்தை பேசுகிறவன் தன்மையிடம்.

63. பேசுகிறவன் தன்னை நான் அல்லது யான் என்று குறித்துக்கொள்வான்.

உதாரணம்:—நான் தீங்கு அறியேன்.
யான் நல்லன விரும்புவேன்.

முன்னிலையிடம்

64. பேசுகிறவன் சொல்வதை எதிர் நின்று கேட்கிறவன் முன்னிலையிடம்.

65. எதிர் நின்று கேட்கிறவனைப் பேசுகிறவன், நீ என்று குறிக்கிறான்.

உதாரணம்:—நீ உன்னாலியன்ற அளவும் அறம் செய்ய விரும்பு.

படர்க்கையிடம்.

66. பேசுகிறவனுல் பேசப்படுபவனும், படுபவளும், படுபவரும், படுவதும், படுவனவும் எல்லாம் படர்க்கையிடம்.

67. பேசுகிறவன், படர்க்கைப் பொருளே, அவன், அவள், அவர், அது, அவை என்ற இவற்றுள் ஒன்ருல் குறிக்கிருன்.

குறிப்பு:—இந்தச் சுட்டுப் பெயர்கள் மட்டுமே யல்லாமல் இயற்பெயரும் பிறவும் படர்க்கை யிடமாகக் கொள்ளப்படும்.

உதாரணம்:—

1. இராமன் தந்தை சொற்படி காடு சென்றன்.
2. சீதை கணவனைப் பிரியாது காடு சென்றள்.
3. பாண்டவர் சூதாடி நாட்டை இழந்தார்.
4. நாய் தன்னை வளர்த்தவனைக் காப்பாற்றியது.
5. யானைகள் அறிந்து அறிந்தும் பாகனையே கொல்கின்றன.

குறிப்பு:—இவை படர்க்கைப் பெயர்கள்.

1. அவன் தாய்க்குப் பணி செய்கின்றன்.
2. அவள் கணவனுக்குப் பணி செய்கின்றள்.
3. அவர் அரசன் ஆணைவழி நிற்பார்.
4. அது நன்றி மறவாது.
5, அவை கோபம் மிகவுடையன.

குறிப்பு:—இவை சுட்டுப் பெயர்கள், படர்க்கையில் வந்தன. மேலே காட்டிய பெயர்களைக் குறித்தசுட்டுப் பெயர்களாக இவற்றைக் கொள்க. கொண்டு, முன்னுல் குறிக்கப்பட்ட பெயர்களைச் சுட்டுப் பெயரால் குறிக்கும் இலக்கண மரபையும் இங்கே விளக்குதல் நலம். அதனோடு, தன்மை, முன்னிலை, படர்க்கைப்

பெயர்களுக்குப் பயனிலை வருமாறு இது என்பதையும் இவ்வுதாரணங்களைக் கொண்டே அறியச் செய்வது, பின்னால் குறிக்கப்படும் சொற்றொடரியல் கற்கின்ற காலத்துப் பேருதவியாகும்.

தன்மைப் பெயர்கள்

68. தன்மைப் பெயர் இரண்டு வகைப்படும். அவையாவன:-தன்மை ஒருமைப் பெயர், தன்மைப் பன்மைப் பெயர் என்பனவாம்.

தன்மை ஒருமைப் பெயர்

69. பேசுகிறவன் தன்னைக் குறிக்கிற **நான்**, **யான்** என்பன தன்மை ஒருமைப் பெயராம். அதாவது தன்மை இடத்தையும் ஒருமை எண்ணையும் நான் என்பதும் யான் என்பதும் காட்டுகின்றன என்பது.

தன்மைப் பன்மைப் பெயர்

70. பேசுகிறவன், தான் ஒருவனேயானாலும், வேறு சிலரையும் தன்னோடு சேர்த்துச் சொல்லும்போது, தன்னை நாம் என்றாவது, யாம் என்றாவது குறித்துக் கொள்ளுகின்றான்; அந்த **நாம்**, **யாம்**, என்பன தன்மைப் பன்மைப் பெயராம். அப்பெயர்கள் தன்மையிடத்தையும், பன்மை எண்ணையும் காட்டும்.

முன்னிலைப் பெயர்கள்.

71. முன்னிலைப் பெயர் இரண்டு வகைப் படும். அவையாவன:— முன்னிலை ஒருமைப் பெயர், முன்னிலைப் பன்மைப் பெயர் என்பன.

முன்னிலை ஒருமைப் பெயர்

72. கேட்கிறவனைப் பேசுகிறவன் குறிக்கிற நீ என்பது முன்னிலை ஒருமைப் பெயராம். இது முன்னிலை யிடத்தையும் ஒருமை எண்ணையும் காட்டியது.

முன்னிலைப் பன்மைப் பெயர்

73. பேசுகிறவன், தன்னெதிர் நின்று கேட்போர் எண்ணிக்கை ஒன்றுக்குமேல் அதிகப்பட்டிருந்தால், நீர், நீங்கள் என்று குறிக்கிறான். அந்த, நீர், நீங்கள் என்பன முன்னிலைப் பன்மைப் பெயராம். இவை முன்னிலை யிடத்தையும் பன்மை எண்ணையும் காட்டின.

படர்க்கைப் பெயர்கள்.

74. தன்மை முன்னிலைப் பெயர்களைப்போலவே, படர்க்கைப் பெயர்களும் இருவகைப்படும். அவையாவன: படர்க்கை ஒருமைப் பெயர், படர்க்கைப் பன்மைப் பெயர் என்பன.

படர்க்கை ஒருமைப் பெயர்·

75. படர்க்கைப் பெயர்களாகிய அவன், அவள், அவர், அது, அவை என்ற இவற்றுள்,

அவன், அவள், அது என்ற மூன்றும் படர்க்கை ஒருமைப் பெயர்களாம்.

76. அவர், அவை என்ற இரண்டும் படர்க்கைப் பன்மைப் பெயர்களாம்.

குறிப்பு:—இங்குக் காட்டிய தன்மை, முன்னிலை, படர்க்கைப்பெயர்கள், ஆங்கிலத்தில் பயிலும் Pronoun ஐ ஒத்த தன்மையன.

உதாரணம்:—

தன்மைப் பெயர்கள்.

நான் பள்ளிக்கூடம் போவேன். யான் பாடங்களைப் படிப்பேன்.	ஒருமை.
நாம் பாபத்தை அஞ்சுவோம். யாம் கடவுள் அருள் பெறுவேம்.	பன்மை.

முன்னிலைப் பெயர்கள்.

ஒருமை.	பன்மை.
நீ சமயத்தில் உதவினய்	நீர் சமயத்தில் உதவினீர். நீங்கள் சமயத்தில் உதவுங்கள்.

படர்க்கைப் பெயர்கள்

உயர்திணை ஒருமை.	உயர்திணைப் பன்மை.
1. அவன் பலநூலும் கற்றுன். 2. அவள் பலநூலும் கற்றுள்.	அவர் பலநூலும் கற்றூர்.
அஃறிணை ஒருமை.	அஃறிணைப் பன்மை.
3. அது கொடிய மிருகம்	அவை கொடிய மிருகங்கள்.

குறிப்பு:—மேலேகாட்டிய உதாரணங்களில், தன்மையும் முன்னிலையும் திணை, பால் இவற்றைக் காட்டவில்லை. ஒருமைஅல்லது பன்மை என்ற எண்ணை மட்டுமே காட்டின.

படர்க்கைப் பெயர்களோ, திணை, பால், எண் என்ற இவற்றை முடியக்காட்டின. இதனைக் கவனிக்க. தன்மை, முன்னிலைகளில் திணை, பால் இவற்றை அறிவது சந்தர்ப்பம் நோக்கித்தான் கூடும்.

இப்படி இருதிணைக்கும் பொதுவாய் அமைந்து நிற்கும் அந்தத்தன்மைமுன்னிலைகளைவிரவுத்திணை என்பர். பாலைப் பொதுப் பால் என்பர்.

வேற்றுமை

77. வேற்றுமையாவது பெயர்ச் சொல்லின் பொருளை வேறுபடுத்துவது. வேற்றுமை பெயர்ச் சொல்லின் ஈற்றில் சேர்ந்து வரும்.

உதாரணம்:—1. இராவணன் கொன்றான். 2. இராவணனைக் கொன்றான்.

குறிப்பு:—இந்த இரண்டு வாக்கியங்களில், முதல் வாக்கியம் கொல்லும் காரியத்தைச் செய்தவன் இராவணன் என்பதைக் காட்டியது. செத்தவன் மற்றொருவன் என்பதையும் குறித்தது. இரண்டாவது வாக்கியமோ, அந்தஇராவணனைச்செத்தவனாகவும், அவனைச் சாவச் செய்தவன் மற்றொருவனாகவும் காட்டுகிறது. ஆகவே கொன்றவனைக், கொல்லப்பட்டவனுக்கியது, 'இராவணன்' என்னும் பெயரோடு சேர்ந்த 'ஐ' என்பது. எனவே இது, பெயர்ச் சொல்லின் பொருளை வேறுபடுத்து நிற்பதால், வேற்றுமை என்ற பெயர் பெறுகின்றது.

மரம் விழுந்தது, மரத்தில் விழுந்தது—என்ற வாக்கியங்களில், முதல் வாக்கியத்தால் விழுந்தது மரம் என்று அறிகிறோம்.இரண்டாவது வாக்கியத்தால் விழுந்தது மரமாகாமே, வேறு ஒன்று எனத் தெரிகிறேம்.

மகன் கொடுத்தான்: மகனுக்குக் கொடுத்தான் என்பவற்றில் முதலாவது கொடுத்தவன் மகனுதலையும், இரண்டாவது ஏற்றவன் மகனுதலையும் காட்டுதல் அறிக. கொடுத்தவனை ஏற்றவனுக்கியது மகன் என்பதோடு சேர்ந்த 'கு' என்பது. பிறவும் இப்படியேதான்.

வேற்றுமை

78. வேற்றுமை யாவன: முதல் வேற்றுமை, இரண்டாம் வேற்றுமை, மூன்றும் வேற்றுமை, நான்காம் வேற்றுமை, ஐந்தாம் வேற்றுமை, ஆறும் வேற்றுமை, ஏழாம் வேற்றுமை, எட்டாம் வேற்றுமை என எட்டாம்.

79, வேற்றுமையை அதன் உருபால் அறியலாம்.

முதல் வேற்றுமை

80. பெயர்ச் சொல் எல்லாம் முதல் வேற்றுமையாம்.

81. முதல் வேற்றுமையை எழுவாய் வேற்றுமை என்றும் சொல்வர்.

82. முதல் வேற்றுமைக்குத் தனி உருபு கிடையாது.

உதாரணம்:—முருகன், கடவுள், மயில், வாகனம்.

இரண்டாம் வேற்றுமை

83. இரண்டாம் வேற்றுமை யுருபு ஐ என்பது.

உதாரணம்:—1. கோயிலைக் கட்டினான்.
2. மரத்தை வெட்டினான்.
3. நூலை இயற்றினான்.
4. பாவத்தை அஞ்சினான்.
} ஐ வந்தது.

மூன்றாம் வேற்றுமை

84. மூன்றாம் வேற்றுமை யுருபு ஆல், ஓடு, உடன் என்பன.

உதாரணம்:—

1. தேர் தச்சனால் செய்யப்பட்டது
2. தாயோடு அறுசுவை போம்
3. தந்தையுடன் மகன் வந்தான்.
} ஆல், ஓல், உடன் வந்தன.

நான்காம் வேற்றுமை

85. நான்காம் வேற்றுமையுருபு கு என்பது.

உதாரணம்: —

1. தாய்க்குப் பணி செய்.
2. கூலிக்கு வேலை செய்.
3. கோபத்திற்கு இடங் கொடாதே.
} கு வந்தது.

ஐந்தாம் வேற்றுமை

86. ஐந்தாம் வேற்றுமை யுருபு இன், இருந்து, நின்று என்பன.

உதாரணம்:—

1. அருளின் மிக்க செல்வமில்லை.
2. அறத்திலிருந்து விலகாதே.
3. நாத்திகரினின்று விலகு.
} இன், இருந்து, நின்று வந்தன.

குறிப்பு:—இன் என்பதொன்றுதான் ஐந்தாம் வேற்றுமை யுருபு. ஆனால் இக்காலத்தில் இன் என்பதை இல் என மாற்றி உப

யோசிக்கிறோம். உதாரணம்: கல்வியில் பெரியவன் கம்பன் என்பது காண்க. இருந்து, நின்று என்பன வேற்றுமையுருபுகள் அல்ல. ஆயினும் அப்பொருள் கொடுப்பதனால், அவற்றைச் சொல்லுருபாகக் கொள்க.

ஆறாம் வேற்றுமை

87. ஆறாம் வேற்றுமை யுருபு அது, உடைய என்பன.

உதாரணம்:–1. இராமனது புத்தகம். } அது, உடைய
2. அவனுடைய வீடு. } வந்தன.

குறிப்பு:—உடைய என்பது சொல்லுருபு. வேற்றுமை யுருபன்று.

ஏழாம் வேற்றுமை

88. ஏழாம் வேற்றுமை யுருபு கண், இல், இடம் என்பன.

உதாரணம்:—

1. மனத்துக்கண் மாசிலன் } கண், இல்,
2. வீட்டில் இருக்கிறான் இராமன் } இடம்
3. அரசனிடம் குடிகள் முறையிடுவர் } வந்தன.

குறிப்பு:—மாசிலன் என்றால் குற்றமில்லாதவன் என்று பொருள்.

மேல், கீழ், உள், புறம், முதலிய பிற உருபுகளும் உண்டு.

1. மேடையின் மேல், 2. தொடையின் கீழ், 3. வீட்டினுள், 4. நகர்ப்புறம் என்பன காண்க.

எட்டாம் வேற்றுமை

89. எட்டாம் வேற்றுமைக்குத் தனி உருபு கிடையாது.

90. அழைக்கும்போது, முதல் வேற்றுமையில் உள்ள பெயர்கள் அடைகிற மாறுதலே எட்டாம் வேற்றுமையாம்.

91. எட்டாம் வேற்றுமையை விளி வேற்றுமை என்றும் சொல்வர்.

உதாரணம்:—முதல் வேற்றுமையில் உள்ள அப்பன், அம்மை, பிள்ளை, அண்ணன், தம்பி, தங்கை, மாமன், இராமன் முதலியன, எட்டாம் வேற்றுமையில் அதாவது அழைக்கும்போது, அப்பா, அம்மா அல்லது அம்மே, பிள்ளாய், அண்ணு, தம்பீ, தங்காய், மாமா, இராமா என மாறுதலடையுமாறு காண்க.

குறிப்பு:—சில பெயர்கள் மாறுதலடையாமலும் வரும். அவற்றை இயல்பு விளி என்பர்.

உதாரணம்:—சீதை, பெருமான் என்பன காண்க.

தன்மைப் பெயர்கள் வேற்றுமை ஏற்குமாறு

92. தன்மை ஒருமைப் பெயராகிய நான் என்பது முதல் வேற்றுமையில் மட்டும் தான் வரும்: பிற வேற்றுமையில் வராது.

உதாரணம்:—நான் பாடங்களைப் படித்தேன்.

93. யான் என்பது வேற்றுமை யுருபுகளை ஏற்கும். அது வேற்றுமை யுருபுகளை ஏற்கும்பொழுது என் என மாறி நின்று ஏற்கும்.

உதாரணம்:—

1. யான் இராமனைக் கண்டேன்	முதல் வேற்றுமை	
2. என்னைக் குமரன் வஞ்சித்தான்	இரண்டாம்	,,
3. என்னால் குமரன் இன்புற்றான்	மூன்றாம்	,,
4. எனக்குப் பகைவன் குமரனே	நான்காம்	,,
5. என்னில் பெரியவன் நீ	ஐந்தாம்	,,
6. எனது புத்தகம் இது	ஆறாம்	,,
7. என்கண்ணுள்ளது பேதைமை	ஏழாம்	,,

குறிப்பு:—யான் என்பது விளி வேற்றுமையில் அதாவது எட்டாம் வேற்றுமையில் வராது. 4-வதில் எனக்கு என்பதில் ன வி லுள்ள அ சாரியை.

94. தன்மைப் பன்மைப் பெயர்களாகிய நாம், யாம் என்பன வேற்றுமை யுருபுகளை ஏற்கும் போது, நம், எம் என நின்று ஏற்கும்.

உதாரணம்:—

நாம் அவரைக் கண்டோம்; யாம் அவரைக் கண்டேம்.
நம்மை அவர் கண்டார்: எம்மை அவர் கண்டார்.

குறிப்பு:—பிறவும் இவ்வாறே காண்க. இவை விளி ஏலா.

முன்னிலைப் பெயர்கள் வேற்றுமை ஏற்குமாறு

95. முன்னிலை ஒருமைப் பெயராகிய நீ என்பது உன் என்றாவது நின் என்றாவது நின்று உருபுகளை ஏற்கும்.

உதாரணம்:—

1. நீ இராமனை மதித்தாய்
2. நின்னை அவன் மதித்தானா?
3. உன்னால் விளைந்த நன்மை யாது?

} பிறவும் இவ்வாறே காண்க.

குறிப்பு:—*நீ என்பது விளிவேற்றுமையில் வராது.*

96. முன்னிலைப் பன்மைப் பெயராகிய நீர், நீங்கள் என்பன நும், நுங்கள் என்றாவது, உம், உங்கள் என்றாவது நின்று உருபுகளை ஏற்கும்.

உதாரணம்:—

1. நீர் நல்லன நாடிச் செய்வீர்
2. நும்மை நாடி நல்லன செய்வாரா?
3. உம்மை நாடி நல்லனவே செய்வர்.
1 நீங்கள் கசடறக் கற்றீர்கள்.
2. நுங்களைப்போற்பிறர்கற்றூர்களல்லர்
3. உங்களால் கற்றுத்தெளிவார் பலர்.

} பிறவும் இவ்வாறே காண்க.

குறிப்பு:—*நீர், நீங்கள் என்பன விளி ஏலா.*

படர்க்கைப் பெயர்கள் உருபு ஏற்குமாறு

97. படர்க்கைப் பெயர்களாகிய அவன், அவள், அவர், அது, அவை என்பன எட்டாம் வேற்றுமை யொழிய மற்ற வேற்றுமைகளில் வரும்.

குறிப்பு:—*அது, அவை என்பன அதனை, அதனுல், அவற்றை, அவற்றுல் என்று இன்னபடியாக வரும்.*

98. படர்க்கை ஒருமைப் பெயராகத் தான் என்பதொன்றும், பன்மைப் பெயராகத் தாம் என்பதொன்றும் உண்டு. அவை உருபேற்கும் போது, தன் என்றும் தம் என்றும் மாறி நின்று ஏற்கும்.

உதாரணம்:—

தன்னைத் தலையாகச் செய்வானும் தான்.

தம்மை இகழ்ந்தமை தாம் பொறுப்பர் சான்றோர்.

குறிப்பு:—தான், தாம் என்பனவும் விளி வேற்றுமையில் வாரா. மேலே காட்டிய உதாரணங்களில் முதல் வேற்றுமையும், பிற வேற்றுமைகளும் வந்திருக்கும் முறையைக் கவனிக்க.

மகரவீற்றுப் பெயர்கள் உருபேற்குமாறு.

99. ம் என்ற எழுத்தைக் கடைசியில் பெற்று வந்த அஃறிணைப் பெயர்கள், உருபேற்கும் போது, அத்து என்னும் சாரியை பெறும்.

உதாரணம:-மரம் + ஐ = மரத்தை; மரம் + ஆல் = மரத்தால்.

குறிப்பு:—மரம் என்பது அஃறிணைப்பெயர்ச்சொல்: ஐ வேற்றுமை உருபு: ஐ என்ற உருபு, மரம் என்ற பெயரோடு சேரும்போது அத்து என்னும் சாரியை இடை நின்றது. அதாவது, மரம் + அத்து + ஐ என நின்று இவை முடிந்தன. இவை ஒன்று படச் சேருகையில், மரம் என்பதிலுள்ள ம் கெட்டு, மர என நின்றது. அத்து என்ற சாரியையில் முதலெழுத்தாகிய அ கெட்டு, த்து என நின்றது. இவ்விரண்டும் சேருகையில் மர + த்து என நின்று மரத்து என்றாயின: மரத்து என்பதோடு ஐ சேர்ந்து மரத்தை என்றாயிற்று.

100. மரம் என்பது போலவே, நிலம், கலம், குடம், குலம், நலம், வலம், இடம், குளம் முதலியன அத்துச்சாரியை பெற்று உருபேற்கும்.

உதாரணம்:—நிலத்துக்கு, கலத்துள், குடத்தை, குலத்தால், நலத்தின், வலத்தது, இடத்தோடு குளத்துக்கண் என்பன காண்க.

101. எல்லாம் என்ற சொல் வேற்றுமை யுருபு ஏற்கும்போது, ம் கெட்டு, அற்றுச்சாரியை பெற்று, உருபோடு உம் என்ற சொல்லைக் கொண்டு முடியும்.

உதாரணம்:— எல்லாவற்றையும், எல்லாவற்றாலும், எல்லாவற்றுக்கும்.

குறிப்பு:—எல்லாம் + ஐ. இவை கூடும்போது, ம் என்பது கெட, எல்லா என நின்று, அதனோடு அற்றுச்சேர, எல்லாவற்று என்றாகி, அதன்மேல் உருபு சேர, எல்லாவற்றை என்றாகி, அதனோடு உம் சேர எல்லாவற்றையும் என்றாயிற்று. பிறவும் இப்படியே முடியும் என்பது நினையத்தகும்.

விசேடக்குறிப்பு:—இதுவரை, அதாவது, இப்புத்தகத்தில் 37 என்ற எண்ணிலிருந்து தொடங்கி, 101 என்ற எண்ணினளவு முடிய உள்ளவற்றில், பெயர்ச் சொல்லினிடமாக அறியக்கூடிய திணை, பால், எண், இடம், வேற்றுமை இவற்றின் பாகுபாடுகளைக் கூறினோம். இனிப் பெயர்ச் சொல், வினைச் சொல், இடைச் சொல், உரிச்சொல் என்ற நால்வகைச்சொற்களின் வகைகளை அடைவே கூறுவோம்.

பெயர்ச் சொற்களின் வகை

102. பெயர்ச்சொற்கள் பெரும்பாலும் ஆறு வகைப்படும்.

அவையாவன: 1. பொருட் பெயர் 2. இடப் பெயர் 3. காலப் பெயர் 4. சினைப் பெயர் 5. குணப் பெயர் 6. தொழிற் பெயர் என்பன.

103. பொருட்பெயராவது உயர்திணை அஃறிணைப் பொருள்களில் ஒன்றைக் குறித்து வரும் பெயர்.

உதாரணம்:—முருகன், கிளி, யானை, தென்னை, நீர்.

104. இடப்பெயராவது ஓர் இடத்தைக் குறித்துவரும் பெயர்.

உதாரணம்:—மதுரை, குளம், கடல்.

105. காலப் பெயர் காலத்தைக் குறித்து வரும் பெயர்.

உதாரணம்:—நாள், வாரம், மாதம, காலை, மாலை, வருடம்

106. சினைப்பெயர் உறுப்பைக்குறித்து வரும் பெயர்.

உதாரணம்:—கை, கால், கண், மூக்கு, செவி, வால், கொம்பு, இலை, வேர்.

107. குணப்பெயர் பொருளின் குணத்தைக் குறித்து வரும் பெயர்.

உதாரணம்:—வெண்மை, கருமை, நன்மை, தீமை, சுவை, அழகு.

108. தொழிற் பெயர் தொழிலைக் குறித்து வரும் பெயர்.

உதாரணம்:—இருத்தல், எழுதல், நடத்தல், உண்டல், உறங்கல், படித்தல்.

குறிப்பு:—இவையல்லாமல், தாய், தந்தைபோன்ற முறைப் பெயர்களும், பார்ப்பார், அரசர், குயவர் போன்ற சாதிப் பெயர்

களும், நாழி, அரை, கால் போன்ற அளவுப் பெயர்களும் உண்டு.

வினைச் சொல்.

109. வினைச் சொல்லாவது பொருளினுடைய தொழிலைக் குறிக்குஞ் சொல்லாம்.

உதாரணம்:—முருகன் படித்தான்.

குறிப்பு:—இதில் முருகன்பொருள். அவன்தொழில்படித்தல். முருகனுடைய தொழிலாகிய படித்தலை உணர்த்தியது படித்தான் என்னும் சொல். ஆதலால் படித்தான் என்பதுவினைச்சொல்.

110. பாலைக் காட்டும் விகுதியோடு கூடி நிறைந்து நிற்கும் வினை வினைமுற்று எனப்படும்.

உதாரணம்:—படித்தான்—இது ஆண்பாலைக் காட்டும் ஆன் விகுதியோடு கூடி நிறைந்து நிற்பதால் வினைமுற்றும்.

111. பொருளைக் குறிக்கும் பெயர்ச் சொல், எந்தத்திணை, பால், எண், இடத்தைக் காட்டுகிறதோ, அந்தத்திணை, பால், எண், இடத்தை அதன் தொழிலைக் குறிக்கும் வினைமுற்றும் காட்டவேண்டும்.

உதாரணமாக:—முருகன் படித்தான் என்பதில், முருகன் என்ற பெயர்ச்சொல், உயர் திணை, ஆண்பால், ஒருமை, படர்க்கையிடம் என்று திணை, பால், எண், இடத்தைக் காட்டியது போலவே, அதன் வினையாகிய படித்தான் என்பதும் உயர் திணை, ஆண்பால், ஒருமை, படர்க்கை என்று திணை, பால், எண், இடத்தைப் பெயர்ச் சொல்லோடு ஒத்துக் காட்டுவது கவனிக்க.

112. வினைமுற்றுச் சொல், திணை, பால், எண், இடம் காட்டுவதோடு காலத்தையும் காட்டும்.

உதாரணம்:—படித்தான், படிக்கிறான், படிப்பான் என்பன காலமும் காட்டுதல் அறிக.

பெயருக்கும் வினைக்கும் உள்ள வேறுபாடுகள்.

113. பெயர்ச் சொற்கள் வேற்றுமை யுருபுகளை ஏற்கும். வினைச் சொற்கள் வேற்றுமை யுருபுகளை ஏலா.

114. பெயர்ச் சொற்கள் காலம் காட்டா. வினைச் சொற்கள் காலம்காட்டும்.

115. பெயர்ச் சொற்களில், திணை, பால், எண், இடம், வேற்றுமை இவை யறியக்கிடக்கும்.

வினை முற்றுக்களில், திணை, பால், எண், இடம், காலம் இவை அறியக் கிடக்கும்.

குறிப்பு:—ஈண்டு வினை என்றது, சிறப்புடைய தெரிநிலை வினையை என்க.

காலம்

116. காலம் மூன்று வகைப்படும்.

அவையாவன: இறந்த காலம், நிகழ் காலம், எதிர் காலம் என்பன.

117. காலமாவது பொருள் நிகழ்ச்சியைக் காட்டும் பொழுது.

இறந்த காலம்

118. இறந்தகாலம் ஒரு தொழில் தொடங்கி முடிந்து விட்டதைக் குறிக்கும்.

உதாரணம்:– செய்தான்: உண்டான்: தின்றான்: சொல்லினான்.

குறிப்பு:—இவற்றுள் செய், உண், தின், சொல் என்பன இன்ன தொழில் என்பதை உணர்த்தின: கடைசியிலுள்ள ஆன் என்பது திணை, பால், எண், இடம் காட்டின: இடையிலுள்ள த், ட், ற், இன் என்பன காலம் காட்டின.

விசேடக் குறிப்பு:—

1. வினைச் சொல்லுக்கு முதற் பகுப்பாய் நின்று, தொழிலின் தன்மையைக் காட்டுவது பகுதி எனப்படும்.

உதாரணம்:—படித்தான், இருக்கிறான், போவார் என்பவற்றில் படி, இரு, போ என்பன முதற் பகுப்பாதலும் படித்தல், இருத்தல், போதல் என்ற தொழிலின் தன்மையைக் காட்டுதலும் அறிக.

2. வினைச் சொல்லுக்குக் கடைசிப் பகுப்பாய் நின்று திணை, பால், எண், இடத்தைக் காட்டுவது விகுதி எனப்படும்.

உதாரணம்:—1 வந்தான், 2 வருகிறாள், 3 வருவார், 4 வருகின்றது, 5 வருவன என்பவற்றில், ஆன், ஆள், ஆர், து, அ, என்பன முறையே உயர்திணை, ஆண்பால், பெண்பால், பலர்பால், அஃறிணை, ஒன்றன்பால், பலவின்பால், படர்க்கை என்பன காட்டுமாறு அறிக. (முதல் மூன்றும் உயர்திணை மூன்று பாலையும் பின் இரண்டும் அஃறிணை இரண்டு பாலையும் காட்டின.)

3. வினைச் சொல்லுக்கு இடைப் பகுப்பாய் நின்று காலத்தைக் காட்டுவது இடைநிலை எனப்படும்.

இறந்த காலம் காட்டும் இடைநிலைகளை இறந்த கால வினைக்குக் காட்டிய உதாரணங்களிற் கண்டு கொள்க. நிகழ்

கால, எதிர்கால இடைநிலை அவ்வக்காலங்கட்குக் காட்டும் உதாரணங்களால் அறியலாம்.

நிகழ்காலம்.

119. நிகழ்காலம் தொழில் தொடங்கி முற்றுப் பெறாத நிலையைக் காட்டும்.

உதாரணம்:—செய்கிறான்; செய்கின்றான்.

குறிப்பு:—**கிறு, கின்று** என்பன காலம் காட்டின. இவை நிகழ்கால இடை நிலைகள்.

எதிர்காலம்.

120. எதிர்காலம் தொழில் தொடங்கப்பெறாத நிலையைக் காட்டும். அஃதாவது இனிமேல் காரியம் தொடங்கும் என்பது காட்டி நிற்கும் என்றபடி.

உதாரணம்:—செய்வார், கொடுப்பார்.

குறிப்பு:—ப், வ் என்பன காலம் காட்டின. இவை எதிர்கால இடை நிலைகள்.

விசேடக் குறிப்பு:—நட, வா, படி, கொடு, எழு, இரு, உண், தின், செல், போ முதலிய பகுதிகளைக்கொண்டு இருதிணை, ஐம் பால், மூவிடத்துக்கும் உரிய வினைகளை மூன்று காலத்திலும் சொல்லுமாறு பயிற்றுதல் நலம்.

வினைச்சொற்களின் வகை.

121. வினைச்சொற்கள், முற்று, எச்சம் என்று இரண்டு வகைப்படும்.

முற்றுச் சொல்.

122. திணை, பால், எண், இடம், காலம்,

தொழில் என்னும் ஆறும் முடியக்காட்டும் வினைச் சொல், வினைமுற்று எனப்படும்.

உதாரணம்:—முருகன் படித்தான்; கடவுளைத் தொழுதார்.

குறிப்பு:—**படித்தான், தொழுதார்** என்பன, திணை, பால், எண், இடம், காலம், படித்தலும் தொழுதலுமாகிய தொழில் என்ற **ஆறும் காட்டுதல் கவனிக்க.** இந்த மாதிரியான **முற்றுச்சொல்லே** வாக்கியத்தில் **பயனிலையாக** வரும்.

எச்சச் சொல்

123. எச்சம் என்றால் குறை என்று அர்த்தம்: எச்சச் சொல் என்றால் குறைச்சொல் என்று பொருள்.

124. எச்சச் சொல்லானது, காலத்தையும் தொழிலையும் மட்டுமேகாட்டும். திணை, பால், எண், இடத்தைக் காட்டாது.

உதாரணம்:—1. தொழுத, 2. வருகிற, 3. தொழுது, 4. வந்து.

குறிப்பு:—தொழுத என்பது இறந்த காலத்தையும், தொழுகிற தொழிலையும் காட்டியது. வருகிற என்பது நிகழ்காலத்தையும், வருகிற தொழிலையும் காட்டியது. திணை, பால், எண். இடத்தைக் காட்டவில்லை. திணை, பால், எண், இடத்தைக் காட்டுவதற்கு வேண்டிய உறுப்பும் குறைந்தசொல்லாக இருத்தலால் எச்சச் சொல் எனப்படுகிறது. இவை வினையையோ அல்லது பெயரையோ சேர்ந்துதான் தம் பொருளை முடியக் காட்டும்.

எச்ச வகை

125. எச்சச் சொல் இரண்டுவகைப்படும்.

அவையாவன:—1. பெயரேச்சம், 2. வினையெச்சம் என்பன.

பெயரெச்சம்

126. பெயர்ச் சொல்லைக் கொண்டு முடியும் எச்சம் பெயரெச்சம் எனப்படும்.

உதாரணம்:—1 தொழுத அன்பன், 2 வருகிற அரசன்.

வினையெச்சம்

127. வினைச்சொல்லைக் கொண்டு முடியும் எச்சம் வினையெச்சம் எனப்படும்.

உதாரணம்:—

1. கும்பிட்டு வீழ்ந்தான்.
2. தொழச் செல்கின்றான்.
3. படித்தால் பரீக்ஷை தேறலாம்.

வினைமுற்றுக்களின் வகை

128. வினை முற்றுக்கள் தன்மை வினை முற்று, முன்னிலை வினை முற்று, படர்க்கை வினை முற்று என்று மூன்று வகைப்படும். இவை ஒருமை யிலும் பன்மையிலும் வரும்.

அப்படி வரும்போது, தன்மை ஒருமைவினை முற்று, தன்மைப் பன்மை வினைமுற்று என்று பெயர் பெறும். (முன்னிலை, படர்க்கை இவற்றோடும் ஒருமை பன்மையைக் கூட்டிக் காண்க.)

குறிப்பு:—இவற்றுக்கு உதாரணம் இப்புத்தகத்துள், 76 என்ற எண்ணுள்ளதன் கீழ்க் காட்டியிருக்கும் உதாரணங்களேயாம்.

129. இந்த மூன்று வகை வினை முற்றுக்களும், 1. செயப்படுபொருள் குன்றிய வினை, 2. செயப்படுபொருள் குன்றா வினை, 3. செய் வினை, 4. செயப்பாட்டு வினை, 5. உடன்பாட்டு வினை, 6. எதிர்மறை வினை என்று பலவேறு வகைப்பட வரும்.

130.

செயப்படுபொருள் குன்றியவினை	செயப்படுபொருள் குன்றாவினை
இராமன் போனான். இதில் இராமன் என்ற எழுவாயும், போனான் என்ற பயனிலையான வினைமுற்றுமே இருக்கின்றன.	இராமன் கடவுளைத் தொழுதான்: இதில் இராமன் என்ற எழுவாயும், தொழுதான் என்ற வினை முற்றும், கடவுளை என்ற இரண்டாம் வேற்றுமைப் பெயரும் இருக்கின்றன.

131. இரண்டாம் வேற்றுமைப் பெயர் தன்னோடு சேரப் பெறாத வினை, செயப்படு பொருள் குன்றிய வினையாம்.

132. இரண்டாம் வேற்றுமைப் பெயர் தன்னோடு சேரப்பெற்ற வினை, செயப்படு பொருள் குன்றாத வினையாம். செயப்படுபொருளாவது, இரண்டாம் வேற்றுமை யுருபை ஏற்ற பெயர்.

133. செயப்படு பொருள் குன்றிய வினை வந்த வாக்கியத்தில், எழுவாயும் பயனிலையுமே சிறப்பாக வரும்.

உதாரணம்:—இராமன் தம்பியோடும் மனைவியோடும் காட்டுக்குச் சென்றான்.

குறிப்பு:—இடையில் பல சொற்கள் வந்தபோதும் இரண்டாம் வேற்றுமைப் பெயர் வராமையால், சென்றன் என்ற வினை, செயப்படு பொருள் குன்றிய வினையாம். செயப்படுபொருள் குன்றிய வினைக்குச் செயப்படு பொருள் வராது.

134. செயப்படு பொருள் குன்றா வினை வந்த வாக்கியத்தில் எழுவாய் பயனிலையோடு செயப்படு பொருளும் சிறப்பாக வரும்.

உதாரணம்:—திருவள்ளுவர் திருக்குறளை இயற்றினர்.

குறிப்பு:—செயப்படு பொருள் குன்றா வினைக்குச் செயப்படு பொருள் வந்தே தீரும்.

செய்வினை.	செயப்பாட்டுவினை.
புலி யானையைக் கொன்றது	யானை புலியால் கொல்லப் பட்டது.

1. செய்வினையிலுள்ள வினை, செயப்பாட்டு வினையில் வரும்போது, படு என்ற சொல்லை நடுவில் பெற்று வரும்.

உதாரணம்:—மேலே உள்ள வாக்கியத்தில், கொன்றது என்ற செய்வினை செயப்பாட்டு வினையில் கொல்லப்பட்டது என்று வந்தது காண்க.

2. செய்வினையில் எழுவாயாக இருக்கும் பெயர், அதாவது, முதல் வேற்றுமைப் பெயர், செயப்பாட்டு வினையில், மூன்ரும் வேற்றுமைப் பெயராக வரும்.

உதாரணம்:—மேலே உள்ள வாக்கியத்தில், புலி என்ற எழுவாய் வேற்றுமைப் பெயர், புலியால் என்று மூன்ரும் வேற்றுமையானது காண்க.

3. செய்வினையில் இரண்டாம் வேற்றுமைப் பெயராகிய செயப்படுபொருள், செயப்பாட்டுவினையில் முதல் வேற்றுமை அதாவது எழுவாயாக வரும்.

உதாரணம்:—மேலே உள்ள வாக்கியத்தில், யானையை என்ற இரண்டாம் வேற்றுமைப் பெயராகிய செயப்படு பொருள், செயப்பாட்டு வினையில் யானை என்று முதல் வேற்றுமை எழுவாயாக வந்தது காண்க.

குறிப்பு:—செயப்படுபொருள் குன்றாத வினைகளே செயப்பாட்டு வினையில் வரக்கூடிய செய்வினைகளாம்.

135. உடன்பாட்டு வினை யென்பது, ஒரு செய்தியை ஒத்துக்கொள்வதைக் குறிக்கும். எதிர் மறைவினை யென்பது, ஒத்துக் கொள்ளாமையை அதாவது, எதிர் மறுத்தலைக் குறிக்கும்.

உடன்பாட்டு வினை	எதிர்மறை வினை
படித்தான்	படித்திலன்
படிக்கின்றாய்	படிக்கின்றிலை
படிப்பாய்	படியாய்

உடன்பாட்டுப் பெயரெச்சம்	– எதிர்மறைப் பெயரெச்சம்
படித்த பாடம் படிக்கிற பாடம் படிக்கும் பாடம்	} படியாத பாடம்

உடன்பாட்டு வினையெச்சம்	எதிர்மறை வினையெச்சம்
தொழுது போனான்	தொழாது போனான்.

குறிப்பு:-படியாத, தொழாது என்றாற்போன்ற எதிர்மறை எச்சங்கள் முக்காலமும் காட்டும் தன்மையன. ஆனால் இறந்தகால

நிகழ்கால வினைமுற்றுக்களுக்கு, இடைநிலையின் பின் இல் என்னும் எதிர்மறைச் சொல் கொடுத்து விகுதி சேர்த்துச் சொல்ல வேண்டும்.

படிக்கவில்லை, படிக்கமாட்டேன், படிக்காமல், படியாமல், என்று வருவனவும் பிறவும் எதிர்மறைகளே.

இடைச்சொல்

136. இடைச்சொல்லாவது, பெயர்ச்சொல்லையும், வினைச்சொல்லையும் அடுத்துநின்று தன்பொருளைத் தருவதோர் சொல்.

137. வேற்றுமை யுருபுகளும், விகுதிகளும், இடைநிலைகளும், சாரியைகளும், சுட்டுக்களும், வினாக்களும், உவம உருபுகளும் இடைச் சொற்களாம்.

உதாரணம்:—

1. மரத்தை வெட்டினான்—ஐ வேற்றுமை யுருபு பெயரை அடுத்தது.
2. நன்மை செய்தான்—ஆன்விகுதி வினையை யடுத்தது.
3. பொன்னன்—அன் விகுதி பெயரை யடுத்தது.
4. உண்டான்—ட் இடைநிலை வினையை யடுத்தது.
5. அறிஞன்—ஞ் இடைநிலை பெயரை யடுத்தது.
6. குழையினன்—இன் சாரியை பெயரை யடுத்தது.
7. இப்புத்தகம்—இ சுட்டு பெயரை யடுத்தது.
8. பாடினானா?—ஆ வினா வினையை அடுத்தது.
9. புலிபோலப் பாய்ந்தான்—போல உவம உருபு வினையை அடுத்தது.

அக் கைகேயியும் இராமனுக்குக் கேட்டினைச் சூழ்ந் தாளோ? கொடியளே. இதில் அ, உம், கு, இன், ஐ, ஓ, ஏ என்பன இடைச்சொற்கள்.

உரிச்சொல்.

138. உரிச்சொல்லாவது பெயர் வினைகளை யடுத்து நின்று, அவற்றின் குணத்தை உணர்த்தும் உரிமையுடைய சொல், உரிச்சொல் பல.

உதாரணம்:—

1. நனி பேதை
2. உறு பொருள்

} நனி, உறு என்பன உரிச்சொல்; பெயரை யடுத்தன; மிகுதியை உணர்த்தின.

சொல்லியல் முற்றும்.

புணரியல்

139. புணர் இயலாவது, இரண்டு சொற்கள் ஒன்றுபடச் சேரும் இலக்கண முறையைக் கூறுவது. புணர்தல் - சேருதல்.

140. சேருகிற இரண்டு சொற்களில், முதலாவது சொல்லி நிறுத்தப்படுகிற சொல் நிலைமொழி யென்று பெயர் பெறும்.

உதாரணம்:—கண் + மணி = கண்மணி

குறிப்பு:-இந்த இரண்டு சொற்களில் முதலாவது சொல்லி நிறுத்தப் பட்ட சொல் கண் என்பது. அதனை நிலை மொழி என்பர்.

141. அந்த நிலைமொழியோடு சேருகிற சொல் வருமொழி யென்று பெயர் பெறும்.

குறிப்பு:—மேலே காட்டிய உதாரணத்தில் அதாவது கண் + மணி என்பதில், மணி என்பது வருமொழி யாகும்.

142. நிலைமொழி வருமொழி என்று பெயர் பெறுகிற இரண்டு சொற்களும் ஒன்று படச்சேரும் போது, 1. நிலைமொழியின் கடைசி எழுத்தேனும், வருமொழியின் முதல் எழுத்தேனும், அந்த இரண்டு எழுத்துக்களேனும், சில மாறுதல்களை அடைவதும் உண்டு. மாறுதல் அடையாமல் சேருவதும் உண்டு.

உதாரணம்:—

நிலைமொழி		வருமொழி		புணர்ந்த வகை
1. அறம்	+	செய்	=	அறஞ்செய்

இதில் நிலைமொழியின் கடைசி எழுத்தாகிய ம் என்பது ஞ் என மாறியது.

2. மண் + குடம் = மட்குடம்.

இதிலும் நிலைமொழியின் கடைசி எழுத்து (ண் என்பது ட் என) மாறியது.

II

1. உன் + தன் = உன்றன்

இதில் வருமொழியின் முதலெழுத்தாகிய த என்பது ற என மாறியது.

2. மண் + தலம் = மண்டலம்.

இதிலும் வருமொழியின் முதலெழுத்து (த என்பது ட என) மாறியது.

III

1. அல் + திணை = அஃறிணை

இதில் நிலைமொழியின் கடைசி எழுத்தாகிய ல் என்பதும் வருமொழியின் முதலெழுத்தாகிய தி என்பதும் முறையே ஃ என்றும் றி என்றும் மாறின.

2. சொல் + தன்மை = சொற்றன்மை

இதிலும் நிலைமொழி ஈறும், வருமொழி முதலும் (ல், த,என்பன ற், ற, என) மாறின

IV

நிலைமொழி வருமொழி புணர்ந்த வகை.

1. கண் + மணி = கண் மணி.

இதில் நிலைமொழி யீறும், வருமொழி முதலும் மாறுதல் அடைந்திலவாதல் காண்க.

2. பொன் + புனை + வேழம் = பொன் புனை வேழம்.

இதிலும் எழுத்துக்கள் மாறுதல் பெறவில்லையாதல் காண்க.

143 நிலைமொழி, வருமொழிகளில் எழுத்துக்கள் மாறுதல் அடையாது அப்படியே சேருமாயின், அது இயல்பு புணர்ச்சி எனப்படும்.

உதாரணம்:—பொன் + மாடம் = பொன் மாடம்.

144. சொற்கள் சேருகையில் மாறுதலடையுமாயின், அது விகாரப்புணர்ச்சி எனப்படும்.

உதாரணம்:—மண் + குடம் = மட்குடம்.

குறிப்பு:—இயல்பு புணர்ச்சி; விகாரப் புணர்ச்சி என்றபெயர்களுங் கூட அப்புணர்ச்சிகளின் இலக்கணத்தைத் தெரியக்காட்டுதெலறிக.

இயல்பு புணர்ச்சி

145. இயல்பு புணர்ச்சியில், வகைகள்கிடையாது. அது ஒன்றே.

விகாரப் புணர்ச்சி

146. விகாரப் புணர்ச்சியில், மூன்று வகைகள் உண்டு.

அவையாவன:—தோன்றல் விகாரம், கெடுதல் விகாரம் திரிதல் விகாரம் என்பன.

தோன்றல்

147. தோன்றல் விகாரமாவது, இரண்டு சொற்கள் சேருகையில் முன்னில்லாததோர் எழுத்துத் தோன்றுவதாம்.

உதாரணம்:—பலா + பழம் = பலாப்பழம் } ப் தோன்றின.
மா + பழம் = மாம்பழம் } ம் தோன்றின.

குறிப்பு:—சாரியை தோன்றுவதும் உண்டு.

உ - ம். மண் + கட்டி = மண்ணங்கட்டி. தோன்றல் இரு சொற்கும் நடுவிலாதும்.

கெடுதல் விகாரம்.

148. கெடுதல் விகாரமாவது இருசொற்களில் ஒன்றிலுள்ள எழுத்து இல்லையாவதாம்.

உதாரணம்:—மனம் + நலம் = மனநலம்.

அரசன் + வாழ்க்கை = அரசவாழ்க்கை.

குறிப்பு:—கெடுதல் விகாரம் நிலைமொழியின் கடைசி எழுத்துத்தான் பெறும்.

திரிதல் விகாரம்.

149. திரிதல் விகாரமாவது, இரண்டு சொற்களிலுமுள்ள எழுத்துக்கள் ஒன்று மற்றொன்றாக மாறுவதாம்.

1. பொன் + கொடி = பொற்கொடி — நிலைமொழி யீறு திரிந்தது.
2. மண் + தின்றவாய் = மண்டின்றவாய் — வருமொழி முதல் திரிந்தது.
3. பொன் + தட்டு = பொற்றட்டு—நிலைமொழி யீறும் வருமொழி முதலும் திரிந்தன.

குறிப்பு:—கிள்ளைச்சொற்பேசு(ம்) நாவுடைய பொற்றொடிகேளாய்! இந்த வாக்கியத்தில், தோன்றல், திரிதல், கெடுதல் மூன்றும் வந்தன.

விசேஷக் குறிப்பு:—திரிதல் விகாரத்தில் நிலைமொழி யீறும் வருமொழி முதலும் தனித்தனி வெவ்வேறு திரியாது, இரண்டும் சேர்ந்து ஒன்றாய்த் திரிதலும் உண்டு. அவள் + தன்னை அவடன்னை என்பது காண்க.

உயிரீற்றுப் புணரியல்.

அஃதாவது உயிரெழுத்தை ஈறாக உடைய சொல்லோடு வருமொழி புணருமாறு கூறுவது.

உடம்படுமெய்.

150. இரண்டு சொற்கள் ஒன்றுபடச் சேரும்போது நிலைமொழியின் கடைசியில் ஓர் உயிரெழுத்தும், வருமொழி முதலில் ஓர் உயிரெழுத்தும் வருமானல், அவ்விரண்டும் ஒன்று சேர்வதற்கு உபகாரமாக இடையில் ஒரு மெய்யெழுத்துத் தோன்றும். அதில் வருமொழி முதலெழுத்தாகிய உயிர் ஏறி முடியும்: இடையில் வருகிற அந்த மெய்யெழுத்து உடம்படு மெய் என்று பெயர் பெறும். உடம்படுமெய் என்றால் ஈருயிரை ஒன்று படுத்தும் மெய் என்றவாறு.

உதாரணம்:—

1. தெள்ளிய வாலின் சிறுபழத் தொருவிதை
2. அகர முதல வெழுத்தெல்லாம் ஆதி
 பகவன் முதற்றே யுலகு

3. உலகமெல்லாம் பரதனே யாள, நீ போய்க், கானம் நண்ணி, யேழிரண்டாண்டில் வாவென் றியம்பினன் அரசன் என்றாள்.

குறிப்பு:—1. தெள்ளிய + ஆலின்: தெள்ளிய வாலின் என்றாயிற்று. தெள்ளிய என்பது நிலைமொழி: ஆலின் என்பது வருமொழி. நிலைமொழியின் கடைசி யெழுத்தாகிய ய என்பது உயிரீறு. ய உயிர்மெய் யெழுத்தன்றோ எனின், ஒரு மெய்யில உயிர் சேர்ந்து முடிந்ததே உயிர்மெய்யெழுத்து: ஆதலால் உயிர்மெய் கடைசியில் உயிரேழுத்தே இருப்பதாகக் கொள்வர்.

ஏனென்ருல், உயிர்மெய்யில் அந்த உயிரில்லாவிட்டால் அந்தக் கடைசியேழுத்து மேய்யேழுத்தேனப்படும். படவே, நிலேமோழி, மெய்யீறுடையதாகிவிடும். ஆதலால், உயிர் மெய்யெழுத்து இருந்தாலும் அதனை உயிரேழுத்தாகவே கோண்டு உயிரீற்றுநிலேமொழி யேன்பர். அந்த முறைப்படி, தேள்ளிய என்பது அகரவீற்றுநிலேமோழி. ஆலின், என்பதில், ஆ என்பது உயிர் எழுத்து: உயிர் முதல் வருமோழி: நிலேமொழி யீற்றுயிரும், வருமொழி முதலுயிரும் ஒன்றுபடச் சேருதற்கு உபகாரமாக இடையில் வ் என்ற உடம்படுமெய் தோன்றியது. தோன்றவே, வருமொழி முதலாகிய ஆ என்னும் உயிர் எழுத்து, அதிலேறி, வா என்ருகி, தெள்ளிய வாலின் என்று முடிந்தது.

முதல + எழுத்தெல்லாம் = முதலவேழுத்தெல்லாம்: இதுவும் மேலே கூறிய இலக்கணமுடையது.

முதற்றே + உலகு: முதற்றேயுலகு. இதுவும் அது. ஆனுல் யகர உடம்படு மெய் தோன்றியது.

பரதனே யாள, நீ போய் வா வேன்று இயம்பினன் என்னும் தொடரில் யகரமும், வகரமும் தோன்றின.

151. உடம்படுமெய் இரண்டு. அவையா வன: வ், ய் என்பன.

உதாரணம்:—கம்பனை யோத்த கவிவலார் உளரோ வுரையீர் ?

சுட்டு, வினு இவற்றின் முன் உயிர் புணர்தல்.

152. அ, இ, உ என்ற சுட்டெழுத்துக் களின் முன்னரும், எகர வினுவின் முன்னும் உயிர் எழுத்து வரின் இடையில் வ் என்ற மெய் தோன்றும்.

உதாரணம்:—

1. பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை.
2. அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை.
3. உவ்விடம் காண்.

குறிப்பு:—இ + உலகம் = இவ்வுலகம், அ + உலகம் = அவ்வுலகம் உ + இடம் = உவ்விடம். சுட்டுக்களின் முன் உயிர்வர, வ தோன்றியதைக் கவனிக்க.

4. எவ்விடர் எனக்கு வந்தடுப்பது?

குறிப்பு:—எவ்விடர் என்பது எ + இடர் சேர்ந்து முடிந்தன. எ என்பது வினா. உயிர்வர வகரம் தோன்றியது கவனிக்க. யகர முதல் வருமொழி வரினும் இதுவே விதி.

விசேடக் குறிப்பு:—சுட்டு வினாக்களின் முன் உயிர்வர வ் தோன்றவே, அவை, அவ், இவ், உவ், எவ், என நிலைமொழியாய் நிற்கின்றன; நிற்கவே, தனிக்குறில் முன்னொற்று உயிர்வரின் இரட்டும் என்ற விதிப்படி, அவ்வ், இவ்வ், உவ்வ், எவ்வ், என நிற்கின்றன. (உலகம் என்பதை வருமொழியாக வைத்துக்கொள்வோம்.) அவ் வருமொழியின் முதலெழுத்தாகிய உயிர் இரட்டித்து நின்ற ஒற்றின்மேல் ஏறி அதாவது, அவ் வ், இவ் வ், உவ் வ், எவ் வ் என்பவற்றின் இறுதியிலுள்ள வகரத்திலேறி அவ்வுலகம், இவ்வுலகம், உவ்வுலகம், எவ்வுலகம் என முடிகின்றன.

153. சுட்டுக்களின் முன்னும், எகர வினா முன்னும் யகரம் அல்லாத மெய்யெழுத்துக்களை முதலாக உடைய வருமொழி வந்தால், அந்த மெய்யெழுத்து இரட்டும்.

உதாரணம்:—

1. அ + புத்தகம் = அப்புத்தகம்.
2. இ + மயில் = இம்மயில்.

3. உ + வயல் = உவ்வயல்

4. எ + கடை = எக்கடை.

குறிப்பு:—வருமொழி முதலிலுள்ள, ப, ம, வ, க என்பன உயிர் மெய்யெழுத்துக்கள். இவற்றை மெய்ம்முதல் என்றது. இவை உயிர் முதல் எனக் கொண்டால் உடம்படுமெய் பெற்று முடிய வேண்டும். அங்ஙனம் முடிவது கூடாமையால், மெய்ம்முத லென்றே கொள்ள வேண்டுவதாகிறது. ஆகவே, உயிர் மெய் யெழுத்து, நிலைமொழியின் கடைசியில் இருந்தால் உயிரின் தன்மையும், வருமொழி முதலில் இருந்தால் மெய்யின் தன்மையும் கொண்டு புணர்ச்சி விதி பெறுகிறது என்று அறியத்தகும்.

விசேடக் குறிப்பு:—வருமொழி முதலில் வருகிற உயிர்மெய், மெய் யின் தன்மை கொள்ளுதலால், வலி, மெலி, இடை என்ற பாகுபாடும் அது பெற்று விதிக்கு இலக்காகும்.

154. *நிலைமொழியீற்று உயிர்முன்*, க, ச, த, ப என்னும் வல்லெழுத்துக்களை முதலாக உடைய சொல் வந்தால் அந்த மெய் இரட்டும்.

உதாரணம்:—

1. கதலி + காய் = கதலிக்காய்.
2. குரங்கு + சண்டை = குரங்குச்சண்டை.
3. யானை + தோல் = யானைத்தோல்.
4. வாழை + பழம் = வாழைப்பழம்.

மெய்யீற்றுப் புணரியல்.

அதாவது, மெய்யெழுத்தைக் கடைசியாக உடைய சொல்லின்முன் வருமொழி புணருமாறு கூறுவது.

155. தனிக்குறிலைச் சேர்ந்த மெய் முன், அதாவது ஒரு குறிலும் ஒரு மெய்யும் உள்ள நிலை மொழியின்முன், உயிர் எழுத்தை முதலாக உடைய சொல் வந்தால், நிலைமொழி யொற்று இரட்டித்து நிற்கும். இரட்டித்த அந்த ஒற்றின்மேல் வருமொழி உயிர் ஏறி முடியும்.

உதாரணம்:—

கல் + எறிந்தான் = கல்லெறிந்தான்.

என் + என்றான் = என்னென்றான்.

குறிப்பு:—கல் என்பது ஒரு குறிலும் ஒருமெய்யு முள்ளசொல். எறிந்தான் என்பது வருமொழி. முதலெழுத்து உயிர். அதனால் நிலைமொழி கல் ல் என்றாகி நிற்ப, எறிந்தான் என் பதிலுள்ள எ என்ற முதலெழுத்தாகிய உயிர் இரண்டாவ துள்ள ஒற்றாகிய ல் என்பதிலேறிக் கல்லெறிந்தான் என்று முடிந்தது. பிறவும் இப்படியே முடியும்.

156. தனிக்குறிலைச் சேராத மெய்யின் முன் அதாவது, தனி நெடிலோடாவது, இரண்டு மூன்று முதலாகிய குறிலோடாவது சேர்ந்து நின்ற மெய் எழுத்தைக் கடைசியிலுடைய நிலைமொழியின் முன் உயிர் வந்தால், அது அந்த மெய்யின்மேல் ஏறி முடியும்.

உதாரணம்:—

1. நீர் + ஓட்டம் = நீரோட்டம். தனிநெடிலைச் சார்ந்த மெய்.

2. அருள் + என்ருன் = அருளென்ருன். இருகுறில் முன்னெற்று.

2. கடவுள் + அருள் = கடவுளருள். மூன்று குறில் முன்னெற்று.

குறிப்பு:—இவ்வொற்றுக்களின்மேல் வருமொழி உயிரேறி முடிந்தது கவனிக்க.

157. மகரத்தை அதாவது ம் என்ற எழுத்தைக் கடைசியில் பெற்றுடைய நிலைமொழியின் முன் க, ச, த என்ற எழுத்துக்களை முதலில் பெற்றுடைய வருமொழி வந்தால் அந்த மகரம் முறையே, ங், ஞ், ந் என்ற மெய்யாக மாறி நின்று முடியும்.

உதாரணம்:—

1. மனம் + குளிர்ந்தது = மனங்குளிர்ந்தது
2. எழுத்தஞ்சும் + சொல் = எழுத்தஞ்சுஞ்சொல்.
3. ஆலயம் + தொழுவதுநன்று = ஆலயந் தொழுவது நன்று.

158. ய், ர், ழ் என்ற மெய்களைக் கடைசியிலுடைய நிலைமொழியின் முன், க, ச, த, ப இவற்றை முதலாகவுடைய மொழி வந்தால், அவையிரட்டும்.

உதாரணம்:—

1. நாய் + குணம் = நாய்க்குணம்.
2. நார் + கட்டில் = நார்க்கட்டில்.
3. தாழ் + கோல் = தாழ்க்கோல்.

ய், ர், ழ் முன் க வர க் தோன்றியது.

1. வாய் + சொல் = வாய்ச்சொல்.
2. போர் + சிறப்பு = போர்ச்சிறப்பு.
3. தமிழ் + சொல் = தமிழ்ச்சொல்.

ய், ர், ழ் முன் ச வர ச் தோன்றினது.

1. பேய் + தன்மை = பேய்த்தன்மை.
2. போர் + திறம் = போர்த்திறம்.
3. தமிழ் + தாய் = தமிழ்த்தாய்.

ய், ர், ழ் முன் த வர த் தோன்றியது.

1. பொய் + பொருள் = பொய்ப்பொருள்.
2. கார் + பருவம் = கார்ப்பருவம்.
3. தமிழ் + புலவர் = தமிழ்ப்புலவர்.

ய், ர், ழ் முன் ப வர ப் தோன்றியது.

புணரியல் முற்றும்.

சொற்றொடரியல்.

159. சொற்கள் இரண்டும் பலவும் தொடர்ந்து நின்று ஒரு கருத்தைத் தெரிவிக்குமாயின் அது சொற்றொடராம். அதன் இலக்கணம் கூறுவது சொற்றொடரியலாம். சொற்றொடரைத் தொடர் மொழி என்றும் கூறுவர்.

உதாரணம்:—

1. அரசன் நல்லன். இரு சொல்லாலாகிய தொடர்.
2. சீதை கற்புக்கரசியாய்விளங்கினள். பலசொற்றொடர்

160. சொற்றொடர் இரண்டு வகைப்படும்.

அவையாவன:—1. எச்சச் சொற்றொடர். 2. முற்றுச் சொற்றொடர் என்பன.

எச்சச் சொற்றொடர்

161. எச்சச் சொற்றொடராவது பொருள் முடிவு பெறாது நிற்கும் தொடர் மொழியாம்.

உதாரணம்:—

1. பெரியோர் நல்லன நாடி
2. கற்றுச் சிறந்த.

குறிப்பு:—இவற்றுள் சொற்கள் தொடர்ந்தும் பொருள் முடிவு காணேம்.

162. முற்றுச் சொற்றொடராவது, பொருள் முடிவுபெற்ற சொற்றொடராம். இது வாக்கியம் எனவும் பெயர் பெறும்.

உதாரணம்:—

1. பெரியோர் நல்லன நாடிச் செய்வர்.
2. கற்றுச் சிறந்த புலவன் இவன்.

குறிப்பு:—இவற்றுள் சொற்கள் தொடர்ந்து பொருள் முடிவு கொண்டிருப்பது காண்க.

வாக்கியத்துக்கு முக்கியமான உறுப்புக்கள்.

163. ஒரு வாக்கியத்துக்கு முக்கியமான உறுப்புக்கள் எழுவாயும் பயனிலையுமாம்.

எழுவாய்.

164. எழுவாயாவது ஒரு தொழிலைச் செய்பவன் அல்லது செய்வதாம்.

உதாரணம்:—முருகன் வந்தான், யானை வந்தது.

குறிப்பு:—எழுவாய் உயர்திணைப் பெயராகவேனும், அஃறிணைப் பெயராகவேனும் வரும்.

பயனிலை.

165. எழுவாயின் தொழிலைத் தெரிவித்து நிற்பதெதுவோ அது பயனிலையாம்.

உதாரணம்:—முருகன் வந்தான், யானை வந்தது.

குறிப்பு:—இவற்றுள், முருகன், யானை என்ற எழுவாயின் வருதற்றொழிலைக்குறித்து நின்றன வந்தான், வந்தது என்னும் சொற்கள். ஆதலின் அச்சொற்கள் பயனிலைகளாம்.

தோன்றா எழுவாய்

166. சில வாக்கியங்களில் எழுவாய் வெளிப் பட நில்லாது வரும்.

உதாரணம்:—1. போனேன் 2. போனாய் 3. போனான்

குறிப்பு:—இவற்றுள், நான், நீ, அவன் என்னும் எழுவாய்கள் வெளிப்படத் தோன்றி நிற்கவில்லை. அவை வெளிப்படாத போதும், வெளிப்பட இருந்தால் எப்பொருள் படுமோ அப் பொருள் சிதையாமல் இருத்தல் காண்க. இவ்வாறு வெளிப் படவாராத எழுவாய், தோன்றா எழுவாய் எனப் பெயர் பெறும்.

செயப்படுபொருள்

167. சில வாக்கியங்களில் செயப்படுபொருளும் வரும். செயப்படுபொருளாவது இரண்டாம் வேற்றுமைப் பெயர்.

உதாரணம்:- நான் அரசனைக் கண்டேன், அரசனை என்பது செயப்படுபொருள்.

எழுவாயை அறியுமாறு

168. பயனிலைக்கு முன், யார் அல்லது எது என்பன போன்ற பொருத்தமான ஒரு சொல்லை

வைத்து வினவ, வரும் விடை எதுவோ அதுவே எழுவாய் என்றறிந்து கொள்க.

உதாரணம்:—முருகன் வந்தான்; அரசர் விஜயம் செய் தார்; புலிகள் வந்தன; சிங்கம் கர்ஜித்தது.

குறிப்பு:- 1. இவற்றுள், எவன் வந்தான்? 2. யார் விஜயம் செய் தார்? 3. எவை வந்தன? 4. எது கர்ஜித்தது? என்று வினவ, முருகன், அரசன், புலிகள், சிங்கம் என்பன விடை யாக வரும். அவை எழுவாயாதலைக் கவனிக்க.

செயப்படுபொருளை யறியுமாறு

169. பயனிலையின் முன் யாரை அல்லது எதை என்பன போன்ற பொருத்தமான சொல் லொன்றை வைத்து வினவ, வரும் விடையே செயப்படுபொருள் என்றறியத்தகும்.

உதாரணம்:—நளன் மக்களைக் கண்டுருகினான்.

குறிப்பு:—எவன் உருகினான்? நளன் எழுவாய். கண்டுருகினான். யாரைக்கண்டு? மக்களைக் கண்டு. செயப்படுபொருள். யாரை உருகினான் என்று வினவ முடியாது. யாரைக் கண்டு என்று பின் வினவ முடியாது. ஆகவே மக்களை என்ற செயப்படு பொருள் கண்டு என்ற வினையைக் கொண்டுதான் முடிகிறது என்று அறிக. கண்டு என்பது காலமும் தொழிலும் மட்டுங் காட்டும் குறைச்சொல்லாகவும், உருகினான் என்ற வினைமுற் றைக் கொண்டு முடிவதாகவும் இருத்தலால், வினையெச்சம். செயப்படுபொருளைப் பெற்று முடிதலால் கண்டு செயப்படு பொருள் குன்றாவினை யடியாகப் பிறந்த எச்சம்.

எழுவாய் பயனிலைகளுக்கு உள்ள தொடர்பு

170. எழுவாய் எந்தத் திணை, பால், எண், இடத்தில் வந்துளதோ அந்தத் திணை, பால், எண்,

130428
சென்னை-600 00

இடத்தோடு அதன் பயனிலையும் ஒத்திருக்க வேண்டும். அப்படி ஒத்துவாராதானல், வாக்கியம் பிழைபடும்.

உதாரணம்:—அவன் வந்தான், அவள் வந்தாள், அவர் வந்தார், அது வந்தது, அவை வந்தன, நீ வருகிறாய், நீர் வருகிறீர், நீங்கள் வருகிறீர்கள், இவை வருகின்றன. இது வருகின்றது.

குறிப்பு:—திணை, பால், இடம் ஒத்துவந்தவாறு கவனிக்க.

1. அவன் வந்தது என்றால் திணைவழு.
2. அவன் வந்தாள் ,, பால்வழு.
3. அவன் வந்தார் ,, பால் வழு (எண்ணும் வழு)
4. அது வந்தான் ,, திணை வழு.
5. அவை வந்தது ,, எண் வழு (பாலும் வழு)
6. அது வந்தன ,, பால் வழு (எண்ணும் வழு)
7. அது வந்தாள் ,, திணை வழு.

இவை திணையும் பாலும் எண்ணும் வழுவின. பிழையின்றி வரவேண்டுமானல், 1. அவன் வந்தான், 2. அவள் வந்தாள், 3. அவர் வந்தார், 4. அது வந்தது, 5. அவை வந்தன என்றின்னபடியாக வரவேண்டும்.

1. நான் பள்ளிக்கூடம் போவான்—இடவழு.
2. நாளைக்குப் பள்ளிக்கூடம் போனேன்—காலவழு.
3. நீ பள்ளிக்கூடம் போனேன்—இடவழு.
4. நேற்றுப் பள்ளிக்கூடம் போவேன்—காலவழு.
5. அவர் பள்ளிக்கூடம் போனீர்—இடவழு.
6. இனிமேல் பள்ளிக்கூடம் போயினோம்—காலவழு.

இவை இடமும் காலமும் வழுவின. பிழையின்றி வரவேண்டுமானல், 1. நான் போவேன், 2. நாளைக்குப் போவேன், 3. நீ போனாய், 4. நேற்றுப் போனேன், 5. அவர் போனார். 6. இனிமேல் போவோம் என்று வரவேண்டும்.

THE B. N. PRESS, MADRAS. C. T. 4. 1935.

216

எமது பிரசுரங்கள்

	ரூ.	அ.	பை.
செந்தமிழ் வாசக பாடம்			
முதற் புத்தகம்	0	2	6
இரண்டாம் புத்தகம்	0	3	0
மாணவர் தமிழ்ப் புத்தகம்			
முதல் வகுப்பு	0	2	0
இரண்டாம் ,,	0	3	0
மூன்றும் ,,	0	4	0
நான்காம் ,,	0	5	0
ஐந்தாம் ,,	0	6	0
ஆறும் ,,	0	7	0
ஏழாம் ,,	0	8	0
எட்டாம் ,,	0	9	0
தமிழ் இலக்கணம்—முதற் புத்தகம்	0	2	0
ஆரம்பத் தமிழ் இலக்கணம்	0	3	0
கதைகளும் பாட்டுக்களும்			
முதற் பாகம்	0	3	0
இரண்டாம் பாகம்	0	4	0
திருநெல்வேலி ஜில்லாச் சரித்திரக் கதைகள்	0	4	6
இந்திய சரித்திரக் கதைகள்	0	5	0
நவீன பூமி சாஸ்திரம்			
சென்னை இராஜதானி	0	8	0
திருநெல்வேலி ஜில்லா	0	7	0
சரஸ்வதி	0	3	0
இலட்சுமி	0	4	0
மாணவர் எண்சுவடி	0	1	6

S. R. சுப்பிரமணிய பிள்ளை,

புத்தக வியாபாரம், திருநெல்வேலி ஜங்ஷன்.